Registered as a Newspaper பக்கங்கள் 10 விலை ரூபா 6.00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 மார்கழி 02 (17-12-93) வெள்ளிக்கிழமை ஓசை 302

## 70கோடி குழந்தைகளுக்கு கல்வி வாய்ப்பு இல்லை

உலகில் 9 நாடுகளில் மொத்தம் 70கோடி குழந்தைகள் கல்வி பெறாதவர்களாக இருக்கிறார்கள் இவர்களில் 50கோடி பேர் பெண்கள் எனவும் தெரிய வந்துள்ளது. மூன்றாம் உலகநாடுகள் குழந்தைகளின் கல்விக்காக தமது வரவு செலவுத்திட்டத்தில் 20சத வீதத்தை செலவிடவேண்டும் என்று ஐ. நா. சபையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். செல்வந்த நாடுகள் வளர்முக உலகில் உள்ள குழந்தைகளின் கல்விக்காக தமது (10ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு மாவட்டத்தில்

# அகதியாய் உள்ளோர் வீடுகள் புனரமைக்க 52 கோடி தேவை

### பாடசாலைகளுக்கு ஒருகோடி அவசியம்

(மட்டக்களப்பு)

**மட்டக்களப்பு மாவட்டத்தில் வீடுகளை இழந்து அகதிகளாயுள்ள மக்களின் வீடுகளைப் புனரமைக்க 52 கோடி ரூபா தேவை எனவும் பாடசாலைகளைப் புனரமைக்க ஒரு கோடி ரூபாவிற்கு மேல் தேவை எனவும் அரச தரப்பு மதிப்பீடு ஒன்றிலிருந்து தெரியவந்துள்ளது.**

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்தகால இராணுவ நடவடிக்கைகளின்போது 38,887 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. சுமார் ஒரு லட்சத்து 10ஆயிரம் பேர் அகதிகளாக உள்ளனர். அங்கு இயங்கும் அகதிமுகாம்களில் உள்ளவர்கள் தவிர பெரும்பாலானோர் உறவினர்கள், நண்பர்களின் வீடுகளில் தங்கியுள்ளனர்.

இதே வேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் சேதமுற்ற வீடுகளை திருத்தி அங்கு வசித்த மக்களை மீளக்குடியமர்த்துவதற்கு 52.3 கோடி ரூபா தேவை என அரசதரப்பு கணிப்பீட்டிலிருந்து தெரிய வருகிறது.

மேலும் இம்மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் தளபாட பற்றாக்குறை நிலவுகிறது. சிலபாடசாலைகளுக்கு கூரைகளே இல்லை. இவற்றை உடனடியாக நிவர்த்தி செய்வதானால் 1.2 கோடி ரூபா தேவைப்படுகிறது எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

## முஸ்லிம் ஊர்காவல் படை தமிழர் மீது துன்புறுத்தல்

(யாழ்ப்பாணம்)

மூதூர்ப் பகுதியில் தமிழ் மக்கள் மீது முஸ்லிம் ஊர்காவற் படையினர் கெடுபிடிகளைப் பிரயோகித்து வருகின்றனர்.

மூதூரிலுள்ள தமிழ் மக்கள் முஸ்லிம் ஊர்காவற் படையினரால் தாக்கப்படுவதுடன், அவர்களது உடைமைகளும் பறிக்கப்படுகின்றன.

விடுதலைப்புலிகள் இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்தினால் முஸ்லிம் ஊர்காவற் படையினர் தமிழ் மக்களைத் துன்புறுத்துவதாகவும், தமிழர்களின் உடைமைகள் கொள்ளை அடிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## இ.தொ.கவின்கோரிக்கைக்கு 25தொழிற்சங்கங்கள்ஆதரவு

(கொழும்பு)

இலங்கை தொழிலாளர் காங்கிரஸினால் தொழிலாளர் நலன் குறித்து முன்வைத்த எட்டு அம்சக் கோரிக்கைகளை தாம் முழுமையாக ஏற்றுள்ளதாகவும் இ. தொ. கா. நடாத்தவிருக்கும் போராட்ட நடவடிக்கைகளுக்குதாம் முழுமையான ஆதரவு நல்கப் போவதாகவும் 25 முக்கிய தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

மலையக மக்களின் பிரச்சினை தொடர்பாக அரசாங்கம் இதுவரைகாலமும் வழுவழுத்தகொள்கையை கடைப்பிடித்து வருகிறது. எதிர்காலத்திலும் இதற்கு இடம் கொடுக்க கூடாது எனவும் அத் தொழிற் சங்கங்கள் மேலும் கூறியுள்ளன.

### தொண்டமானுடனான பேச்சு

## ஜனநாயக ஐ·மு· உறுப்பினர் காமினி மீது கண்டனம்

(கொழும்பு)

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி தலைவர் காமினி திசநாயக்கா, தொண்டமானுடன் நடாத்திவரும் பேச்சுக்களை அம்முன்னணியின் உறுப்பினர்கள் சிலர் எதிர்த்து வருகின்றனர்.

செயற்குழுவின் அனுமதியின்றி காமினி திசநாயக்கா எதுவித முடிவும் எடுக்கமுடியாது எனவும் அவ்வாறு அவர் நடந்துகொண்டால் கட்சி பிளவுபடும் நிலைமை ஏற்படும்என்றும் அக்கட்சியின் தலைவர்களில் ஒருவரான ஏ. சி, குணரட்ண தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், காமினி திசநாயக்க தொண்டமானுடன் நடாத்திய பேச்சுக்கள் குறித்து செய்திகளை வைத்துக் கொண்டு எதுவும் கூறமுடியாது எனவும் தெரிவித்தார்.

## மாதம் 4500பரல் மண்ணெய் யாழ். எடுத்து வரப்படும்

### செயலக புனர்வாழ்வு பகுதி தகவல்

மாதாந்தம் 4500 பரல் மண்ணெண்ணெய் யாழ். குடாநாட்டுக்கு எடுத்து வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ். செயலக புனர்வாழ்வு பகுதி தெரிவித்துள்ளது.

மாதமொன்றுக்கு குடாநாட்டுக்கு 5000 பரல் மண்ணெண்ணெய் எடுத்துவரப்படுமென முன்பு அறிவிக்கப்பட்டபோதிலும் அவை குடாநாட்டுக்கு ஒழுங்காக வந்து சேராமை தெரிந்ததே.

இதேவேளை தற்போது நவம்பர் மாதத்திற்குரிய மண்ணெண்ணெய் பருத்தித்துறை துறைமுகத்தில் மார்க்கோ கப்பலில் இருந்து இறக்கப்பட்டுக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இம்மண்ணெண்ணெய் அங்கிருந்துநேரடியாக பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டு வருவதாகவும் இவற்றைப் பெறுவதற்கு பருத்தித்துறை துறைமுகத்தில் பலநோக்குக்கூட் (10 ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தத்தில் குண்டு வீசும்போது எங்கே என்று பார்க்கமுடியாது

### சுதந்திரக்கட்சி எம். பி அனில் தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்தத்தில் குண்டு வீசும் போது எங்கு வீசப்படுகிறது என பார்க்கமுடியாது சிறிலங்கா அரசு தனது வளங்கள் முழுவதையும் முற்றாக பயன்படுத்தி வடக்கு கிழக்கு யுத்தத்தை முடிவிற்கு கொண்டு வரல் வேண்டும் என சிறிலங்கா சுதந்திரக்கட்சி எம்பியான அனில் முனசிங்க தெரிவித்துள்ளார்.

அவசரகாலச் சட்ட நீடிப்பு மீதான விவாதம் நேற்று பாராளுமன்றத்தில் நடைபெற்றது. இதன் போது உரை நிகழ்த்துகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரை நிகழ்த்துகையில்; யுத்தம் ஒன்றின் போது குண்டுகளை எங்கு போட வேண்டும் எங்கு போடக் கூடாது என்று பார்த்துப் போட முடியுமா? அது சாத்தியமான ஒன்றல்ல இந்த யுத்தத்தை இன்னும் பத்து வருடங்களுக்கு இழுத்துச் செல்லும் நிலையை ஏற்படுத்த வேண்டாம் என்றார்.

### மலையக தொழிலாளர்களுக்கு வழங்கப்படும்

## விசேட அடையாள அட்டைக்கு அமைச்சர் தொண்டா எதிர்ப்பு

(கொழும்பு)

தோட்டத் தொழிலாளருக்கு விசேட அடையாள அட்டை வழங்கப்படுவது குறித்து அமைச்சர் எஸ். தொண்டமான் கடும் ஆட்சேபனை தெரிவித்துள்ளார்.

தேசிய அடையாள அட்டை தவிர்ந்த இவ்வாறு வழங்கப்படும் அடையாள அட்டைகள் சட்டபூர்வமானதல்ல எனவும் அவர் தெரிவித்தார்.

தோட்டப்பகுதிகளில் வெளியார் ஊடுருவல் காணப்படுவதாகவும், அவர்களினால் ஏற்படக்கூடிய 'பயங்கரவாத' அச்சுறுத்தலை தவிர்க்கவே இவ்வாறு விசேட அடையாள அட்டைகள் வழங்கப்படுவதாகவும் சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஹெலி தாக்குதல்

(யாழ்ப்பாணம)

சுன்னாகம் பகுதியில் நேற்றிரவு 8-10 மணியளவில் சிறிலங்கா இராணுவ ஹெலிகொப்டர் ஒன்று கலிபர்தாக்குதலை மேற்கொண்டது.

மேற்படி தாக்குதல் சம்பவத்தின்போது எவருக்கும் காயம் ஏற்பட்டதாக தெரியவரவில்லை.

## 57,700 நோயாளர் யாழ்ஆஸ்பத்திரியில்சிகிச்சை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் இந்த ஆண்டு 57,700 நோயாளர்கள் சிகிச்சைபெற்றிருப்பதாக வைத்தியசாலை வட்டாரத்தினர் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களில் 1949பேர் இறந்துள்ளனர். சிறிலங்கா படையினரின் எறிகணைத் தாக்குதல்கள், விமானக் குண்டுவீச்சு (10 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### வெற்றுப்போத்தல்கள் தேவை

வெற்றுப் போன்விட்டா, மாலமட், வீவா, ஹார்லிக்ஸ் போத்தல்கள் மூடியுடனும், ஜாம், புரோடினேக்ஸ், பியர், கோடியல் போத்தல்கள் மூடியில்லாமலும் எம்மால் கொள்வனவு செய்யப்படுகிறது. ரேஸ்ட் லைன் இன்டஸ்ரீஸ் (தனி) லிமிட்டெட், 14, சினியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (சி-8054)

### துளிர்

தமிழ்நாடு, புதுவை அறிவியல் இயக்கம் இணைந்து வெளியிடும் சிறுவர் அறிவியல் இதழ். கிடைக்கும் இடம் வசந்தம் புத்தக நிலையம் 405, அருச்சுனா வீதி, யாழ்ப்பாணம். (6861)

### தேவை

தமிழ் ஆங்கிலபுதியபழைய பாவிப்புக்கு உதவாத தட்டச்சு இயந்திரம் உடன் தேவை, தொடர்பு:- R மருதலிங்கம் 8/1 அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (6910)

### தேவை

பஞ்சுமிட்டாஸ், ஐஸ்பழவகைகளை துவிச்சக்கரவண்டி, தள்ளுவண்டி மூலம்விற்பனை செய்யக்கூடியவர்கள் உடன் தேவை: வானவில் குளிர்பான நிலையம், ஆரியகுளம் சந்தி யாழ்ப்பாணம். (சி-8139)

### வேளாண்மைப் போட்டிகள்

''சக்தி'' இயற்கைப் பசளை, நீமியா உரம், ''மார்க்கோசின்'' பூச்சிகொல்லி பாவனை செழிப்பான நல் விளைச்சல்தரும் பயிருக்கும், முயற்சிக்கேற்ற பலனுக்கும், போட்டிகளில் வெற்றிசகும் வழி செய்கிறது. சக்தி இயற்கைப் பசளை பக்கற் ரூ 9/- நீமியா உரம் கிலோ ரூ. 17/- 'மார்க்கோசின்'' பூச்சிகொல்லி — போத்தல் (200 மி. லீ) ரூபா. 100/- மில்க் வைற்''. (சி-8137)

### ஒப்படைக்கவும்

கொழும்பில் இருந்து வரும் போது தாண்டிக்குள தடைமுகாமில் வைத்து நல்லைபாபிரதர் என்பவரிடம் வி. அமிர்தலிங்கம் ஆகிய நான் கைக்குலட்டர் (கணனி) கொண்டு வந்து தரும்படி கொடுத்தேன் இதை தயவுசெய்து வி. அமிர்தலிங்கம், நவாலி கிழக்கு, மானிப்பாய் விலாசத்தில் ஒப்படைக்கவும். (6909)

### வீடு விற்பனைக்கு

நீர்வேலி, பருத்தித்துறை பிரதான வீதியில் 4 பரப்பு காணியுடன் வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: திருமதி வ கார்த்திகேசபிள்ளை 6-வது மைல் கட்டை நீர்வேலி தெற்கு, நீர்வேலி. (6900)

### காரை எஸ். செங்காவின் A/L வகுப்புக்கள்

AIL 94, 95 பிரத்தியேக தமிழ் வகுப்புக்கள் வாரத்தில் 3 மணித்தியாலயம் நடைபெறும். ஆரம்பம் 20.12.93 பி.ப 3 30 மணி எக்களம் கல்வி நிறுவனம். (மனோகராச்சந்தி) K.K Sவீதி யாழ்ப்பாணம். (6911)

### உடன் விற்பனைக்குண்டு

பிறிமா-லோமன் 5 நாள் பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. ஓடர்களுக்கு புரோயிலர், சேவல், வெள்ளை பேட்டுக் குஞ்சுகள், கோல்டன்கொமட் குஞ்சுகள் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு மல்லிகாபதி சந்தை கிழக்கு ஒழுங்கை மானிப்பாய். (6913)

### கடிகாரங்களா? றேடியோவா?

நல்ல நிலையில் உள்ள கடிகாரங்கள், றேடியோக்கள் உதிரிப்பாகங்களுக்காக வாங்கப்படும் விற்கப்படும் சகல கடிகாரங்கள் றேடியோக்கள் உத்தரவாதத்துடன் திருத்தப்படும். டில்கா வாச் அன்ட் றேடியோவேக்ஸ் (DilkaWatch & RadioWorks) ஸ்ரான்லி வீதி, (வானவில் அருகில்) கிளை - கண்டிவீதி, சாவகச்சேரி. (சி-8129)

### 5-ம் ஆண்டு புலமைப் பரிசில் வகுப்பு

புதிய பிரிவு ஆரம்பம் 18-12-1993 சனிக்கிழமை 2.00 மணி கணிதம், தமிழ் திரு. கனகசபை (ஓய்வுபெற்ற அதிபர்) கடந்த காலங்களில் சிறந்த பெறுபேறுகளை பெற்றுத் தருகின்ற ஓர் நிறுவனம் இதுவே. புதிய அனுமதிகளை பெற்றுக் கொள்ளவும் பாரதி கல்விநிலையம்- சித்தன்கேணி (6891)

## G. A. Q. - 95

### பேராதனை

கலை, விஞ்ஞானம், வர்த்தகம் எத்துறையிலாயினும் A-L இல் மூன்று பாடங்கள் சித்தியடைந்தவர்களும், பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம்.

இதற்கான பல்கலைக்கழகப் பதிவுகள் எமது நிறுவனத்தினால் செய்து தரப்படும்.

இதற்கான விரிவுரைகள்

**11-12-93இல் ஆரம்பமாகிவிட்டன**

விவரங்களையும், விண்ணப்பப் படிவங்களையும், நேர அட்டவணையையும் நேரில் பெற்றுக்கொள்ளவும்.


விவரங்களுக்கு:

*S.* அருள்நங்கை

**புதிய உயர் கல்லூரி**

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(சி-8152)




## மக்கள் வங்கி

எழுதுவினைஞர் ! சுருக்கெழுத்தாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான பரீட்சைக்குரிய

### பயிற்சி வகுப்பு

(மாலை நேரம)

ஆரம்பம் : **20-12-93**

(மாலை 3 மணி)

- 40 மணித்தியால வகுப்பு.
- பயிற்சி பரீட்சை நடைபெறும்.

ஆசிரியர் அ. குமாரவேல்

**புதிய உயர் கல்லூரி**

ஆரியகுளம் சந்தி, யாழ்.

(சி-8149)

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### அமரர் வல்லிபுரம் தங்கமணி

(பிரபல சங்கீத, வீணை வித்துவான், கல்பொல்லல, கரவெட்டி மேற்கு, நெல்லியடி)

மலர்வு 18-6-1932 — உதிர்வு 17-11-1993

பாசத்தின் உறைவிடமாய் பண்பின்
சிகரமாய் வாழ்க்கையில் எமக்குக்
கலங்கரை விளக்காக வழிகாட்டிய
அன்புத்தெய்வமே! நீங்கள் எம்மண்ணை
விட்டு கொழும்பு நகரில் உயிர்
நீத்தீர் உங்கள் பிரிவு எம்மை
பெரிதும் துயரத்தில் ஆழ்த்திவிட்டது
என்றாலும் எங்கள் இதயத்தில் என்றும்
வாழ்ந்து கொண்டேயிருக்கிறீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
நாங்கள என்றும் பிரார்த்திக்கின்றோம்.

அந்தியேட்டிக்கிரியை இன்று 17-12-1993 வெள்ளிக்கிழமை எமதில்லத்தில் நடைபெறும். உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

என்றும் உங்கள் பிரிவால் துயருறும்

**அன்பு மனைவி, மக்கள், மருமக்கள் பேரப்பிள்ளைகள்.**

தகவல்
க. முறிகண்டி
கரவெட்டி மேற்கு. (சி-8148)

## நினைவு கூருகின்றோம்...

### 1993-12-17

1986ஆம் ஆண்டு இதேதினத்தில் சுகவீனம் காரணமாக எமைப்பிரிந்த.

**சுரேஸ்** (க தயானந்தன்-கோட்டைக்கல்லாறு-மட்டு)

1988ஆம் ஆண்டு நெடுந்தீவுப்பகுதியில் இந்தியப் படையினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய,

**லெப். ரவி** (இராமச்சந்திரன் - ரவிச்சந்திரன் ஓடக்கரை, பருத்தித்துறை-யாழ்)

அம்பாறை-அக்கரைப்பற்று, ஆலடிவேம்புப் பகுதியில் சிறிலங்கா ஊர்காவல் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 03 தமிழர்கள்.

1990ஆம் ஆண்டு மட்டு நகரில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட, மட்டு ஈரலிக்குளம், பெரியபுல்லுமலையைச் சேர்ந்த இளைஞன் உட்பட 02 தமிழர்கள்.

1992ஆம் ஆண்டு கிளி-ஆனையிறவுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட திடீர்ச் சமரில் வீரச்சாவெய்திய,

**கப்டன் மணவாளன்-சந்திரன்** (மார்க்கண்டு சிறிஸ்கந்தராசா-தங்கபுரம்-வவுனியா)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி-8144)

யாழ்ப்பாணம்



# தேசியவாதம் உறுதிமிக்க ஓர் அரசியல் சக்தி; காலம் கடந்து பிரிட்டன் கற்ற பாடம்

பாலகுமாரன்

> "பயங்கரவாதப் பட்டத்தால் மட்டம் தட்டப்பட முடியாதது மக்களின் தேசிய உணர்வு"

உலகையே பெரு வியப்பில் ஆழ்த்திய செய்தி யொன்று அண்மையில் பிரித்தானிய நாளேடு ஒன்றால் வெளியிடப் பட்டது. அச் செய்தியை இதுவரை காலமும் மறைத்து இரகசியமாக வைத்திருந்த பிரித்தானியப் பிரதமர் பெரும் சங்கடத்திற்கும், நெருக்கடிக்குள்ளும் இதனால் உள்ளாக நேர்ந்தது. பிரதமர் யோன் மேஜர் பதவி விலக வேண்டு மென்ற குரல்களும் எழுந்தன. ஏனென்றால் பல நூறுமுறை பயங்கரவாதிகள் என்றும் தக்கபாடம் படிப்பிப்போம் என்றும் வீராவேசக் குரல் எழுப்பிய பிரித்தானிய அரசு இரகசியமாக I. R A. எனப்படும் ஐரிசு குடியரசுப் படையினரோடு பேச்சுவார்த்தைகள் நடாத்த முயன்று கொண்டிருக்கிறது என்பதுதான் அச்செய்தி. கடந்த சனவரி மாதத்திலிருந்தே ஐரிசு குடியரசுப்படையின் அரசியல் பிரிவான 'சின்பெயின்' (Sinnfein) கட்சியோடு பிரித்தானிய அரசு வட அயர்லாந்து சிக்கலை அமைதி வழியில் தீர்க்க ஏதேனும் வழியிருக்கிறதா என அறிய தொடர்பு கொண்டதை இக்கட்சித் தலைவர் ஜெரி அடம்சும் ஒத்துக் கொண்டார். யார் முதலில் தொடர்பு கொண்டார்கள் என்பதில் இரு தரப்பாரும் முரண்பட்ட போதும் இப்போது தொடர்பினை மேலும் பலப்படுத்த முயற்சிகள் நடைபெறுவதை இரு தரப்பாரும் வரவேற்கின்றனர். பிரித்தானிய அரசாங்க உயர் அதிகாரியொருவர் ''தொடர்பிற்கான கதவுகள் திறந்தே உள்ளன. அமைதிக்கான முயற்சியை தொடர்வகில் மிக்க உறுதியாகவுள்ளோம்'' என்கிறார். அது போலவே சின்பெயின் தலைவரும் ''நானும் வட அயர்லாந்துச் சிக்கல் தீர்வதையே விரும்புகிறேன். ஆனால் ஐரிசு வீடுதலை இயக்கம்தோன்றியமைக்கான அடிப்படைச் சிக்கல்களும் அது தொடர்ந்து இயங்கியமைக்கான காரணங்களும் அற்றுபபோக வேண்டும் என்கிறார்.

எனவே தலைக்கு வந்த கத்தி தலைப்பாகையோடு போனது போய் தனது ஆட்சிக்கு ஏற்பட விருந்த ஆபத்தினை புத்திசாலித்தனமாக கையாண்டதன் மூலம் தனது அமைதி முயற்சிகட்கு மேஜர் இப்போது மட்டான ஆதரவினை அவர் பெற்றுவிட்டார். ஆனால் இவரின் இம் முயற்சியை முற்றாக எதிர்ப்போரும் உளர். இவர்கள் வட அயர்லாந்தின் புரட்டஸ்தாந்து மதத்தினை சார்ந்த பிரதான அரசியல் கட்சித் தலைவர்கள், வடஅயர்லாந்து என்றும் பிரித்தானியாவோடு இணைந்திருக்க வேண்டும் என விரும்புவதால், இணைவாளர்கள் (Unionist) என்றழைக்கப்படுவோரில் மிகத் தீவிரமானவரும் புரட்டஸ்தாந்து சனநாயக இணைவாளர் கட்சித்தலைவருமான இயன் பெய்ஸ்லி (Ian pais ley) அவர்கள் (பிரித்தானிய ஆட்சியாளர்) சொன்னார்கள், பொய் சொன்னார்கள் தாம் அகப்படும் வரை பொய் சொன்னார்கள்'' என கடுமையாக பிரித்தானிய அரசை கண்டித்தார். இச்செய்தியின் பின் வட அயர்லாந்தில் மோதல்கள் மேலும் அதிகரித்துவிட்டன. மத தீவிரவாத புரட்டஸ்தாந்து குழுவினர் அங்குள்ள கத்தோலிக்க மக்கள் மேல் தாக்குதல்களை அதிகரித்துள்ளனர்.

25 வருடங்கட்கு மேலாக 3000 மக்களுக்கு மேல் பலிகொண்ட இப் போராட்டம் வட அயர்லாந்தின் கத்தோலிக்க மக்களின் இதுவரை நிறைவேறாத அபிலாசையின் வெளிப்பாடாக ஐரிசு குடியரசுப்படையினர் மிக வித்தியாசமான போராட்டமொன்றை நடாத்தி வருகின்றனர். மிகத் தீவிரவாதிகள், மோசமான பயங்கரவாதிகள் என இவர்களை பலரும் பட்டம் சூட்டி மட்டம் தட்டப் பார்த்தாலும் இன்றுவரை தமது தேர்ந்தெடுத்த வழிமுறையான நகர்ப்புற கெரில்லாத் தாக்குதல்கள், அதிர்ச்சியூட்டும் குண்டு வெடிப்புக்கள் என தொடர்ந்து அலுக்காது, சலிக்காது போராடி வருகின்றனர். இவர்களது இப் போராட்டத்திற்கான காரணங்கள் மிகப்பழமையானவை. வரலாற்று வழிவந்தவை. பிரித்தானியா எனப் பொதுவாக இன்று அழைக்கப்பட்டாலும் இங்கிலாந்து, ஸ்கொத்லாந்து, வேல்சு, வட அயர்லாந்து எல்லாம் சேர்ந்த நாடுகளின் கூட்டமைப்பாகவே இது உள்ளது என்பதும் அதனாலே ஐக்கிய இராட்சியம் என்றும் பிரித்தானியா அழைக்கப்படுவதும் தெரிந்த விடயமே. 1536ஆம் ஆண்டளவில் இங்கிலாந்தும், வேல்சும் இணைக்கப்பட்டது. ஸ்கொத்லாந்து இணைப்போ நீண்டகால சச்சரவுக்குள்ளாகி 1707ஆம் ஆண்டு நடைபெற்ற ஒரு வாக்கெடுப்பில் மிகச்சிறிய பெரும்பான்மை வாக்குகளால் ஸ்கொத்லாந்து இணைய நேரிட்டது. அங்கு இன்று வரை அதிருப்தி நிலவுகின்ற போதும் அயர்லாந்து இணைப்பே பெரும் சிக்கலாகி விட்டது 1800-ம்ஆண்டில் அயர்லாந்து தீவு இங்கிலாந்தோடு இணைக்கப்பட்டது. என்றாலும் 1921ஆம் ஆண்டு கத்தோலிக்க மதத்தைப் பெரும்பான்மையாகப் பின்பற்றும் அயர்லாந்தின் பெரும்பான்மைப் பகுதிகள் இங்கிலாந்தினின்றும் பிரிந்து சென்று தம்மை அயர்லாந்து குடியரசு எனஇறைமையுள்ள தனிநாடாக்கி விட்டனர். இதன் தலைநகரே டப்ளின் ஆகும். இன்று 35 லட்சம் மக்களைக் கொண்ட அயர்லாந்து குடியரசில் 95 வீதமானோர் கத்தோலிக்கரே யாவர். இதேசமயம் புரட்டஸ்தாந்து மதத்தினை பெரும்பான்மையாகக் கொண்ட வட அயர்லாந்தின் 6 மாநிலங்களும் தமது மத அடிப்படையில் இங்கிலாந்தோடு தொடர்ந்து இணைந்திருப்பதையே விரும்பினும், இப்பகுதியின் 16 இலட்சம் மக்களில் மூன்றிலொரு பகுதியாகவுள்ள கத்தோலிக்க மக்களோ, இதனை விரும்பாது அயர்லாந்துக் குடியரசோடு சேர்ந்திருக்கவே விரும்பினர். எனினும் இற்றைக்கு 70 ஆண்டுகட்கு முன்னர் பிரித்தானிய நாடாளுமன்றிலே நிறைவேற்றப்பட்ட சட்டமொன்றின் மூலம் கத்தோலிக்கரின் எதிர்ப்பைக் கணக்கிலெடுக்காது பெல்பாஸ்ற்றை (Bel fast) தலைநகராகக் கொண்ட வட அயர்லாந்துப் பகுதி தொடர்ந்தும் இணைக்கப்பட்டது. எனவே அன்றிலிருந்து கத்தோலிக்க மக்களிடையே பிரித்தானிய எதிர்ப்பு போராட்ட வடிவம் பெற்று பிரித்தானியப் படைகள் எதிரிப்படைகளாகக்கணிக்கப்பட்டன. எனவே இன்று இக்கத்தோலிக்க மக்கள் அயர்லாந்துக் குடியரசோடு இணைவதன் மூலம் தம்மை தன்னாட்சி பெற்ற மக்களாக்க போராடி வருகின்றனர். இப்போராட்ட வெளிப்பாடாக ஐரிசு குடியரசுப் படை மிகப் பிடிவாதத்தோடு இயங்கி வருகின்றது.

ஐரிசுப் தேசியப் பிரச்சினை கார்ல் மாக்கின் கவனத்தையும் ஈர்த்தது என்பது வரலாறு. உலகின் மிக நீண்டகாலமாக நடைபெற்று வரும் போராக இப்போராட்டம் கருதப்படுகின்றது. ஒரு காலகட்டத்திலே மிகச் சிக்கலான மூன்று சர்வ தேசியப் பிரச்சினைகளுள் அயர்லாந்துப் பிரச்சினையும் ஒன்றாக கருதப்பட்டது. (மற்றையவை தென் ஆபிரிக்க, மத்திய கிழக்கு பிரச்சினைகளாகும்) என்றாலும் அப்படிப்பட்ட சிக்கலை அடிப்படையாகக் கொண்ட ஐரிசுக் குடியரசுப் படையின் (I.R.A) நடவடிக்கைகள் எப்போதும் விவாதத்திற்கும் விமர்சனத்திற்கும் உட்பட்டதாகவே இருந்து வந்துள்ளது. உலகிலே தலை சிறந்த பயங்கரவாத இயக்கமாக இதனை மேற்குலகமும் அதனைப் பின்பற்றி ஏனைய உலகர்களும் சித்தரித்து வந்தன. இவர்கள் வட அயர்லாந்தில் பிரிட்டிசு இராணுவத்தை தாக்குவதோடு நின்றுவிடாமல் பிரித்தானியாவின் முக்கிய மைய நகரங்களிலே பாரிய குண்டு வெடிப்புக்களை தொடர்ச்சியாக ஏற்படுத்தி மிகப் பரபரப்பை எப்போதும் ஏற்படுத்துபவர்கள். அண்மைக்காலமாக 1992ஆம் ஆண்டிலிருந்து இவர்கள் குறிப்பாக இலண்டன் மாநகரிலே ஏற்படுத்தி வரும் குண்டு வெடிப்புத் தாக்கங்கள் பேரழிவுகளை ஏற்படுத்தி வருகின்றன. சில காலத்திற்கு முன் இலண்டன் மாநகரின் வர்த்தக மையமொன்றிலே இவர்கள் வைத்த பாரிய குண்டு வெடிப்பு ஏற்படுத்திய அழிவின் பெறுமதி 100 கோடி பவுண்ட் ஆகும் ஆனால் இவர்கள் எங்கு குண்டு வைத்தாலும் அது பொதுமக்கள் மையங்களாக இருப்பின் முன்னறிவித்தல் கொடுப்பது வழக்கம். அல்லாவிடின் பல்லாயிரக்கணக்கான மக்கள் இதுவரை இறக்க நேரிட்டிருக்கும். இவர்களுக்கும் உலகமெங்கும் ஆதரவு இல்லாமலில்லை. முன்னர் லிபியத்தலைவர் உதவியிருக்கிறார், அது மட்டுமன்றி அமெரிக்காவில் வதியும் ஐரிசு மக்கள் மிகத் தாராளமாக - இவர்களுக்கு உதவுகிறார்கள். எனவே இவர்கள் தமது தாயகப் பகுதியில் மட்டுமன்றி தம்மை படைகொண்டு அடக்க முற்படும் இங்கிலாந்திலும் தமது போராட்டத்தை விரிவுபடுத்தி மிகநீண்ட காலமாக செயற்பட்டு வருகின்றனர். இத்தகைய சூழலில் அண்மைக்கால பேச்சு வார்த்தை தகவல்கள் வெளியாகியுள்ளன.

இப்பேச்சு வார்த்தைகட்கு முன்னதாகவே பிரதமர் யோன் மேஜருக்கும் அயர்லாந்துக் குடியரசின் பிரதமர் அல்பேட் றெனோல்ட்சுக்கும் (Albert Reynolds) பல சுற்றுப் பேச்சுக்கள் வட அயர்லாந்து அமைதி பற்றி நடந்துள்ளன. எனினும் ஐ ஆர். ஏ அமைப்பின் அரசியல் பிரிவோடு பேச வேண்டிய நிர்ப்பந்தம் இன்று பிரித்தானிய அரசுக்கு உருவாகியுள்ளதாகக் கருதப்படுகின்றது. முதலாவதும் முக்கியமானதுமான ஐரிசு விடுதலைப் படையின் குண்டு வெடிப்புக்கள் இன்று இங்கிலாந்தின்பொருளாதாரத்தை சீர்குலைக்கச் செய்கின்றன, இலண்டன் தெருக்கள் இன்று எவருக்குமே பாதுகாப்பற்றவையாகி விட்டன. புகையிரத நிலையங்கள், முக்கிய சந்தைப் பகுதிகள், மக்கள் கூடுமிடங்கள், வங்கிகள், படைமுகாம்கள், நிதி நிறுவனப் பகுதிகள், வர்த்தக மையங்கள் எங்கும் தொடர்ந்தும் குண்டு வெடிப்புகள் நடந்த வண்ணமேயுள்ளன. இற்றைவரை இத்தகைய குண்டு வெடிப்புக்களால் ஏற்பட்ட சேதம் 20 பில்லியன் டொலர் (2000 கோடி டொலர்) என பொதுவாக மதிப்பிடப்படுகின்றது. தாங்க முடியாத பெரும் தொகை இது. அத்தோடு உலகஅமைதி பற்றி வாய் கிழியப் பேசும் பிரித்தானியாவிற்கு இக்கட்டான சூழல். ஊருக்கு மட்டும் தானா உபதேசம்? என்கிற கேள்வி எழுந்துள்ளது, தென்னாபிரிக்காவின், மத்திய கிழக்கின் அமைதிக்கு பேச்சுவார்த்தை என்றால் சொந்தப் பிரச்சினையை தீர்க்க மட்டும் மாற்றுவழியா என்கிற வினா எழுந்துள்ளது. அது மட்டுமன்றி இந்தியா, சிறிலங்கா போன்ற நாடுகள் எதிர்ப்பது போல வெளியார் தலையீடு வடக்கு அயர்லாந்து சிக்கலைத்தீர்க்க அனாவசியம் என வேறு மேஜர் கூறி வருகின்றார். ஐ. நாவின் கவனம், அமெரிக்க கவனம் வடஅயர்லாந்து பக்கம் இப்போது திரும்பியுள்ளது. பொது நலவாயத்தின் செயலாளர் நாயகம் தன்னை நடுவராக இவ் விடயத்தில் செயற்பட வேறு அனுமதி கேட்டு வருகிறார். இவற்றினை ஏற்க மேஜர் மறுத்தாலும் சொந்தமாக முயற்சிக்கவேண்டிய நிலைக்கு அவர் இப்போது தள்ளப்பட்டுள்ளது தெளிவாகிறது. எனவே கறுப்பரும் வெள்ளையரும், யூதரும் பாலத்தீனியரும் பேசமுடியும் என்றால் ஏன் கத்தோலிக்கர்களும் புரட்டஸ்தாந்தினரும் பேச முடியாது என்பதே அங்குள்ள கேள்வியாக இன்றுள்ளது

எனவே அமைதி வழியை காண்பதற்காக அயர்லாந்துக் குடியரசின் பிரதமரோடு உச்சி மாநாடொன்றை பிரித்தானியப் பிரதமர் விரைவில் நடாத்தவுள்ளார். ஏற்கனவே சின்பெயின் கட்சியை அங்கீகரிக்கா விட்டாலும் பேச்சுவார்த்தையில் ஈடுபட அவர் தயாராகி விட்டார். இதற்கிடையில் பெல்பாஸ்ற்றில் அதிகரித்துவரும் படுகொலைகள் அமைதி தேடவேண்டியதன் அவசியத்தை மேலும் வலியுறுத்துகின்றன. கடந்த அக்டோபர் மாதம் மேற்குப் பெல்பாஸ்ற் பகுதியின் முக்கிய கடைப்பகுதியில் திட்டமிட்ட நேரத்திற்கு முன்னதாகவே குண்டொன்று வெடித்ததால், குண்டை காவிச் சென்றவரும் (I A.R உறுப்பினர்) வேறு 9 புரட்டஸ்தாந்து மக்களும் கொல்லப்பட்டனர். பின் 2 நாள் கழிந்து பழிக்குப்பழியாக 7 கத்தோலிக்கர் புரட்டஸ்தாந்து தீவிரவாதிகளால் கொல்லப்பட்டனா. இவ்வாறாக வார முடிவில் மொத்தம் 17 கத்தோலிக்கர் கொல்லப்பட்டனர். இத்தகைய மதத்தின் பெயரால் நடக்கும் மோதல்கள் பிரித்தானிய சனநாயகத்தின் மறுபக்கமாகும்.

பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டாலும் பிரச்சினைகள் இதன் மூலம் தீர்வு காணப்படுமா என்பது இப்போது கூறமுடியாத விடயம் ஏனென்றால் மிகக் கடுமையான நிலைப்பாடுகளே எல்லாத் தரப்பிலும் இதுவரை நிலவி வந்துள்ளது. வடஅயர்லாந்து புரட்டஸ்தாந்து பிரிவினரே எத்தகைய பேச்சுக்களையும் குழப்பவே முயற்சிப்பர். அதே சமயத்தில் பிரித்தானிய அரசோ இம் மக்களின் அச்சத்தை போக்கும் முகமாக அயர்லாந்துக் குடியரசு யாப்பில் வட அயர்லாந்திற்கு உரிமை கோரும் விதிகளை நீக்கிவிடுமாறு கேட்டுவருகின்றது அயர்லாந்துக் குடியரசு அரசோ முதலில் பிரித்தானிய மக்களின் தன்னாட்சி உரிமைகள் தத்துவங்களை ஏற்க வேண்டுமெனவும் வட அயர்லாந்திலும், அயர்லாந்துக் குடியரசிலும் என இரண்டு மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்புக்கள இவ் விடயமாக நடாத்தப்பட வேண்டுமென கோரி வருகின்றது. எனவே உடனடியாகபேச்சுவார்த்தைகள் பயன் தரு நிலை இல்லை இதற்கிடையில் I.R.A இயக்கமோ வழமை போல் தனது குண்டு வெடிப்புக்களை அரங்கேற்றி வருகின்றது. இருந்தபோதும் தொடரப்படும் பேச்சுக்கள் காரணமாக சில காலம் தனது நடவடிக்கைகளை IRA இடை நிறுத்தி சின்பெயின் கட்சியோடு நேரடியாக பிரித்தானிய அரசு பேச வழிவகுக்கக் கூடும்என்ற நம்பிக்கை இப்போது முளைவிட்டுள்ளது.

அயர்லாந்து குடியரசின் பிரதமர் குறிப்பிட்டதுபோல் பேச்சுவார்த்தையை குழப்ப பலரும் முயல்வர் ஆனால் இக் கால கட்டம் எல்லா அரசியல் வாதிகட்கும் மிகமுக்கியமானது இவர்கள் மிக்க அமைதியாக தெளிவான சிந்தனையோடும் உறுதியோடும்இருக்கவேண்டும்.

என்று அவர் குறிப்பிட்டது நிகழுமா என்பதுவினாக்குறிதான் ஏனென்றால் பிரதமர் மேஜருக்கு எதிரான அவரது கட்சிக்காரர்கள், எதிர்க்கட்சிகள் தமது குறுகிய அரசியல் நலனுக்காக இப் பேச்சுவார்த்தைக் காலகட்டம் பயன்படுத்தப்படக் கூடும். ஆனால் எம்மை பொறுத்தவரை ஒரு பேருண்மை மிகத் தெளிவாகி விட்டது. நோர்ந் தென்னன் என்ற ஆய்வாளர் குறிப்பிட்டதுபோல் 'தேசியவாதம்என்பது இன்றையஉலகின்பெரும்உணர்வுபூர்வமான உறுதிமிக்க அரசியல் சக்தியாக உருவெடுத்து விட்டது'' என்பதே அது.

# போதிய வளங்கள் பாடசாலைகளில் இல்லாததால் தனியார் கல்வி நிலையம் செல்ல வேண்டியுள்ளது

அண்மையில் வெளிவந்த க.பொ.த (உ|த) 93 ஆம் ஆண்டு பரீட்சை முடிவுகளின்படி, யாழ் மாவட்டத்தில் கணித, விஞ்ஞான, வர்த்தக, கலைத்துறைகளில் முதலிடம் பெற்ற மாணவர்களை சந்தித்தபோது பெறப்பட்ட தகவல்கள் இங்கே தரப்படுகின்றன.

கணிதப் பிரிவில் யாழ். இந்துக்கல்லூரி மாணவன் S. சுஜிதரன், விஞ்ஞானப் பிரிவில் யாழ். இந்துக்கல்லூரி மாணவன் A. மீனாட்சிசுந்தரம், வர்த்தகப் பிரிவில் ஹாட்லிக் கல்லூரி மாணவன் J. ஜெகச்செல்வமும், கலைப் பிரிவில் திருக்குடும்ப கன்னியர் ஆங்கிலப் பாடசாலை மாணவி ஜுலியட் வலன்ரீனா பயஸ் உம் முதலிடம் பெற்றுக் கொண்டனர்.

கணிதப் பிரிவில் மாவட்ட மட்டத்தில் முதலிடத்தையும் தேசிய அளவில் ஐந்தாம் இடத்தையும் பெற்றுக் கொண்ட சிவசுப்பிரமணியம் சுஜீதரனை அச்செழு வடக்கிலுள்ள அவரது இல்லத்தில் சந்தித்தோம். உயர்தரம் படிக்கத் தொடங்கும் போதே நான்கு பாடங்களிலும் அதிவிசேட சித்திகள் பெறவேண்டும் என்ற இலட்சியத்துடன் படிக்க ஆரம்பித்து, அந்நோக்கு நிறைவேறியதில் மகிழ்ச்சியுடன் காணப்பட்டார் சுஜீதரன்.

ஆரம்பக் கல்வியை சுன்னாகம் மயிலணி மகா வித்தியாலயத்தில் ஆரம்பித்து 6ஆம் ஆண்டு புலமைப்பரிசிற் பெற்று, யாழ் இந்துவில் கல்வியைத் தொடர்ந்து க.பொ.த (சா|த) இலும் ஏழு பாடங்களில் அதிவிசேட சித்திகளை இவர் பெற்றுக்கொண்டார். உயர்தரத்தில், கல்வி சார்ந்த ஊக்கல்கள், ஒத்துழைப்புக்கள் பற்றியும் சுஜீதரன் கூறினார். 93ஆம் ஆண்டு பிரிவு மாணவர்களின் உயர்தரக் கல்வி ஆரம்பமாக வேண்டிய காலப்பகுதியிலிருந்து ஒரு வருடம் பின் சென்றே ஆரம்பமாகியது, 1 1|2 வருட காலமே உயர்தரக் கல்வியை எம்பிரிவு மாணவர்களால் பெற முடிந்தது

பாடசாலையில் இயன்ற அளவு பாட அலகுகளை முடித்துத் தந்தார்கள் அடிக்கடி பரீட்சைகள் வைத்து, மாணவர்களின் நிலையினை, பெற்றோருடன் ஆசிரியர்களை உரையாடல்கள் மூலம் சந்திக்க வைத்து குறை நிறைகளை அறிந்து கொள்ள வைத்ததும். எங்கள் முயற்சிகளுக்கு உறுதுணையாக இருந்தது. கல்லூரிநூலகமும் பெரும் பயனைத் தந்தது. கணிதத்துறையைப் பொறுத்த வரையில் ஆங்கிலப் புத்தகங்கள் நல்லதொரு வழிகாட்டல்களை தரக்கூடியன இவ்வகையான, நூல்களை, நூலகம்எமக்கு அளிந்ததும் பெரும்பயனாகஅமைந்தது என்றார் சுஜிதரன்.

எமது பகுதி மாணவர்களுக்கான வசதிகள்மிகக்குறைவு எனக்கும் இந்நிலை ஏற்பட்டது இராணுவ நடவடிக்கைகளினால் எனது பாடநூல்களை 2,3 இடங்களில் வைத்தே படிக்கமுடிந்தது. உயர்தரப் பரீட்சை ஆரம்பிப்பதற்கு சில தினங்களுக்கு முன்னர்தான், முழுமையாக எல்லா நூல்களையும், எனது வீட்டிற்கு கொண்டு வந்து படிக்க முடிந்தது என்று அவர் கூறினார்.

கணிதத்துறை மாணவர்களுக்காக தன் அனுபவத்தில் கைக்கொண்ட சில செயற்பாடுகளைச் கூறும்போது மாணவர்கள் வகுப்பறைக் கற்பித்தல்களை விட தனதுசொந்த முயற்சியில் பாட அலகுகளை மீட்கும் நூல்களைத் தேடி அவற்றிலுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காணவும் முயலவேண்டும் இதுஅவர்களுடைய பரீட்சை நேரத்தில் மிகுந்த தன்னம்பிக்கையைத் தரும். இதை விட்டு, விட்டு நாள் முழுவதும் தனியார் கல்வி நிறுவனங்களுக்குஓடிக்கொண்டிருப்பது எவ்விதபயனையும் தராது. எங்களுக்கான கல்விக் காலம்குறைந்து இருந்தமையினாலேயே பாட அலகுகளை முடிப்பதற்காகவே தனியார் கல்வி நிறுவனங்களுக்கும் நான் செல்லவேண்டிஇருந்தது என்றும் சுஜிதரன் தெரிவித்தார்.

> **மாணவர்கள் வகுப்பறை கற்பித்தல்களோடு, தமது சொந்தமுயற்சியில் பாட அலகுகளை மீட்டும், நூல்களைத் தேடி, அவற்றிலுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காணவும் முயல வேண்டும். அது பரீட்சை நேரத்தில் மிகுந்த தன்னம்பிக்கையைத் தரும்.**

அவரது கல்வி தவிர்ந்த துணை நடவடிக்கைகள் பற்றிக் கேட்டபோது; கல்லூரியில் இந்து இளைஞன் எனும் சஞ்சிகையின் தமிழ் பதிப்பின் உதவி ஆசிரியராக கடமையாற்றினேன். விஞ்ஞானமன்றத்தின் தலைவராகவும் சில காலம் இருந்தேன். தமிழ் மொழியிலான, கட்டுரைப் போட்டிகள் பலவற்றிலும் வெற்றி பெற்றுள்ளதாக கூறி அவர் பெற்ற பரிசுகளையும் காட்டினார். இதைவிட, சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையிலும் சேவை யாற்றினேன் என அவர் கூறினார். புத்தகங்கள் வாசிப்பது தனது முக்கிய பொழுதுபோக்கு எனத் தெரிவித்து, அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிலையமான 'நாஸா' விலிருந்து அவர் நேரடியாக பெற்றுவந்த, அண்டவெளி பற்றிய அறிவியல் சஞ்சிகைகளையும் காண்பித்தார். 'நாஸா' விலிருந்து அமெரிக்க மாணவர்களுக்காக வெளியிடப்படும் இச்சஞ்சிகைகள் அவற்றை வாசித்து கருத்துக்களை அனுப்புகையில் இலவசமாகவே தனக்கு அனுப்பி வைக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

எதிர்காலத்தில், பொறியியலின் எத்துறையில் ஆர்வம் கொண்டுள்ளீர்கள் என கேட்டபோது; இலத்திரனியல், கணனி விஞ்ஞானத் துறைகளில் உயர்கல்வி பெற ஆவல் கொண்டுள்ளதைக் கூறிய அவரிடம், எங்கள் மண்ணின் சாபக்கேடுகளில் ஒன்றான, எங்கள் மண்ணின் வளங்களிலிருந்து உருவாகும் புத்திஜீவிகள் வெளியேற்றத்திலும், உங்கள் பெயர் சேர்க்கப்படுமா? எனக் கேட்டோம். நிச்சயமாக சேர்க்கப்படமாட்டாது. எனது உயர்கல்வி முடிந்ததும், நிச்சயம் இந்த மண்ணுக்கே எனது அறிவு பயன்பட உழைப்பேன் என சுஜீதரன் கூறினார்' அவரது வாக்கினை நம்பிக்கையோடு உள்வாங்கியவாறு, அவருக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்து விடைபெற்றோம்.

வர்த்தகத் துறையில் மாவட்ட மட்டத்தில் முதலிடத்தையும், தேசிய அளவில் ஆறாவது இடத்தையும் பெற்றுக் கொண்ட பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவனான ஜெகதீசன் ஜெகச்செல்வத்தினை புலோலி கிழக்கிலுள்ள அவரது இல்லத்தில் சந்தித்தோம். கிரமமாக, ஒழுங்காக பாடங்களைப் படித்து, அதன் மூலமாக நல்லதொரு பெறுபேற்றினை பெற்றுவிட்ட பூரிப்போடு உரையாடினார் ஜெகச் செல்வம்.

வர்த்தகத்தினை குடும்ப பின்னணியாக கொண்டதனால் அத்துறையில் ஆவலோடு படிக்க விருப்பம் கொண்ட ஜெகச்செல்வம், க.பொ.த (சா|த) இல் நான்கு பாடங்களில் அதிவிசேட சித்திகளைப் பெற்றுக்கொண்டவராவார். எனது குடும்பத்தினரும், வர்த்தக துறையில் நான் கற்பதை ஊக்கப்படுத்தியமையும், எமது கல்லூரியின் ஒத்துழைப்பும், உயர்தரத்தில் நான்கு பாடங்களிலும் அதிவிசேட சித்திகளைப் பெற வைத்தது என கூறினார் ஜெகச்செல்வம்.

இந்தப் பெறுபேறுகளைப் பெற உங்களுக்கான ஒத்துழைப்புக்கள் எவ்வாறு அமைந்தது எனக் கேட்டோம். பாடசாலையில், ஆசிரியர்களின் ஆதரவு-நூலக வசதிகள் என எவ்வகையிலும் ஒத்துழைப்பு இருந்தது. எனது கல்லூரியின் பழைய மாணவர்கள், கொழும்பு போன்ற இடங்களிலிருந்து பாடசாலைக்கு அனுப்பி வைக்கும், வர்த்தக உலகின் அண்மைய நடவடிக்கைகள், தரவுகள் என்பன எனக்குப் பெரும் உதவியாக இருந்தது. எங்கள் ஆண்டு மாணவர்களுக்கு பெரும் தடையாக இருந்த, 11/2 வருடம் மட்டுமேயான உயர்தரக்கல்வியினால், பாட அலகுகளை முழுமையாக முடிப்பதில் பெரும் சிரமம் இருந்தது. எனினும் கல்லூரியில், பிரத்தியேக வகுப்புக்களை வைத்து, எமது கல்விஊட்டலுக்கு பெரும் ஊக்கலைத் தந்ததைக் குறிப்பிட வேண்டும் என ஜெகச்செல்வம் தெரிவித்தார்.

கல்லூரியில் நடாத்தப்படும் மாதாந்த, தவணைப் பரீட்சைகளை கிரமமாக எழுதி வந்தேன். இது எனக்கு பாட அலகுகளை மீட்டெடுப்பதிலும், எனது நிலையினை அறிந்து கொள்வதிலும் உதவியாக இருந்தது. உயர்தரம் படிக்க ஆரம்பித்த போது இப்படியான சிறந்த பெறுபேற்றை பெற வேண்டுமென எண்ணிநான் ஈடுபடவில்லை. எனினும் கிரமமாக, ஒழுங்காக, தினமும் படித்து வந்ததினால் இப்போது கிடைக்கப்பெற்ற இப்பெறுபேறு எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது என ஜெகச்செல்வம் கூறினார்.

தனியார் கல்வி நிறுவனங்களின் உதவி பற்றிக் கேட்ட போது பாடசாலைக் கல்வியை, எந்நிலையிலும் தனியார் நிறுவனங்களின் கல்வியோடு ஒப்பிட முடியாது. பரீட்சைக்காக, பாடசாலை விடுமுறை தரும் வரையில் நான் தினமும் பாடசாலைக்கு சென்றேன். பாடசாலைகள், மாணவர்களுக்கான, முழு வளத்தினையும் வழங்குகையில் தனியார் கல்வி நிறுவனக் கல்வி என்று பேச்செழ அறவே வாய்ப்பில்லை என உறுதியாகக் கூறினார் ஜெகச்செல்வம். எனது கல்லூரியில், நான் எடுத்துக் கொண்ட பாடங்களிலொன்றான அளவையியலுக்கு ஒரு நிரந்தர ஆசிரியர் இல்லாத பட்சத்திலேயே, நான் தனியார் நிறுவன கல்வியை நாட வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளானேன். எனவே, பாடசாலைகள், முழுமையான வளத்தினை வழங்கும் பட்சத்தில் இவ் நிர்ப்பந்தமும் ஏற்பட இடமில்லை என அவர் தெரிவித்தார்.

எனது, கற்றலை, மனதில் பதித்துக் கொள்ள, யோகாசனம் மிகவும் உதவியது. ஞாபகசக்தி என்பது, மாணவர்களுக்கு மிகவும் முக்கியமானதொன்று. அவ்வகையில் நான் தினமும் செய்து வந்த யோகாசனமும் எனது ஞாபக சக்தியை வழிப்படுத்த உதவியது என மேலும் தெரிவித்தார் ஜெகச்செல்வம்.

கல்வி சார் துணை நடவடிக்கைகளில் பங்களிப்பு பற்றிக் கேட்டபோது, கல்லூரியின் வணிக மன்றத்தின் செயலாளராக பணிபுரிந்ததாகவும், கல்லூரி வணிகத்துறை மாணவர்களுக்கு கல்வியூட்டலில் உதவுவதாகவும் கூறினார்.

எதிர்காலத்தில் முகாமைத்துவ கற்கை நெறிகளில் ஆவல் கொண்டுள்ளதாக கூறிய ஜெகச்செல்வம் மேற்படிப்பு முடிந்ததும் தனது பிரதேசத்திலேயே வணிக நிறுவனமொன்றை ஆரம்பித்து நடாத்த கருக்கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார் அவரது இலட்சியம் நிறைவேற, அவருக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்து விடைபெற்றோம்.

உயிரியல் துறையில், மாவட்ட மட்டத்தில் முதலிடத்தையும். தேசிய அளவில் முப்பத்தியோராவது இடத்தையும் பெற்ற அம்பிகைபாகன் மீனாட்சி சுந்தரத்தை உடுவிலிலுள்ளஅவரதுஇல்லத்தில் சந்தித்தோம். உயிரியற் துறைப்பெறுபேறுகள், யாழ் மாவட்டத்தில் பெரு வீழ்ச்சி கண்டுள்ள இம்முறை, மூன்று பாடங்களில் அதிவிசேட சித்தி பெற்றிருக்கும், மீனாட்சி சுந்தரம், உயரிய சேவையை

மக்களுக்கு அளிக்க வல்ல மருத்துவத் துறையை இலட்சியமாகக் கொண்டதனால் உயிரியல் துறையைகற்க ஆவல் கொண்டதாக கூறினார்.

ஆரம்பக் கல்வியை காரைநகர் சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாசாலையிற் கற்று புலமைப்பரிசில் பெற்று, யாழ் இந்துக் கல்லூரியில் தன் கல்வியைத் தொடர்ந்த மீனாட்சுந்தரத்திடம், சிறந்த பெறுபேற்றைப் பெறுவதற்காக கல்லூரி அளித்த ஒத்துழைப்புகள் பற்றி கேட்டோம்.

பரிசோதனைகளை முக்கியமாகக் கொண்ட உயிரியல் துறையில், முழுமையாக பரிசோதனைகளை மேற் கொள்வதற்கு கால அவகாசம் கிட்டவில்லை. எனினும், கல்லூரி நிர்வாகத்தினரின் வேண்டுகோளில், யாழ் பல்கலைக் கழகம் நடாத்திய விரிவுரைத் தொடர்கள், பல்கலைக்கழக வளாகத்தில் நடாத்திய கல்விக் கண்காட்சி என்பன, இக்குறைகளை ஓரளவேனும் நிவர்த்தி செய்ததாக அமைந்தன.

உயிரியல் துறையில், எமது பிரதேச மாணவர்களுக்குரிய வசதிகள், வாய்ப்புகள், தென்னிலங்கை மாணவர்களோடு ஒப்பிடும்போது கிடைப்பது மிகமிகக் குறைவாகும். உயிரியல் துறைப் புள்ளி வழங்கல் திட்டங்களுக்கு இசைவாக, எமது மாணவர்களால் விடையளிக்க முடியாமலிருப்பது எனப் பல காரணங்கள் உயிரியல் துறையில், முக்கியமாக விலங்கியல் துறையில் பெறுபேறுகள் வீழ்ச்சியடைவதற்கான காரணமாக கருதப்படுவதாக கூறினார் மீனாட்சி சுந்தரம்.

கல்லூரியின், செஞ்சிலுவை வட்டத்தின், மருத்துவப் பொறுப்பாளராகவும் மீனாட்சிசுந்தரம். சேவையாற்றியுள்ளார் உயர் தரக் கல்விக்கான கால அளவு குறைந்தமையினால் வேறு' கல்வி சார், சாராத நடவடிக்கைகளில் ஈடுபட வாய்ப்பில்லாமல் போய்விட்டதாக அவர் மேலும் கூறினார்.

உயிரியல் துறை மாணவர்களுக்கு, உங்கள் அனுபவங்களிலிருந்து என்ன கூற விரும்புகிறீர்கள் எனக் கேட்டபோது' அன்றைக்கன்றே கற்பித்தவற்றை மீள நினைவூட்டல் முக்கியமானது, கற்பித்தலுடன் ஒன்றி, அதனுடன் தொடர வேண்டும், இல்லையேல் கற்பித்தல் எங்கோ செல்ல, நாம் பின் தள்ளப்படும் சூழ்நிலை உருவாகும். எனவே கற்றலை அவதானிப்புடன் மேற்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார்.

மீனாட்சிசுந்தரம், மருத்துவத்துறையில் பல சாதனைகளைபுரிந்து, இம்மண்ணுக்கு பெருமை சேர்க்க வாழ்த்துக்களை தெரிவித்து விடை பெற்றோம்.

கலைத்துறையில் யாழ் மாவட்டத்தில் முதலிடத்தையும், தேசிய அளவில் இருபத்தி நான்காவது இடத்தையும், திருக்குடும்ப கன்னியர் ஆங்கிலப் பாடசாலை மாணவி ஜுலியட் வலன்ரீனா பயஸ் பெற்றுக்கொண்டார். நெடுந்தீவைச் சேர்ந்தஇவர் தனது சொந்த இடத்துக்கு சென்றமையால் அவரை சந்திக்க முடியவில்லை.

## நேர்காணல் - அருணன்

## உழைப்பு

**உழைப்பின் வெகுமதியாக அல்லாமல், சிறப்பான தேர்ச்சி எப்பொழுதும் கிட்டுவதில்லை.**

யாழ்ப்பாணம்

(சிறுகதை)

டாங்கிகளோடும் -
கனரக வாகனங்களோடும் -
இராணுவத்தினர் -
அக்கிராமத்தை முற்றுகையிட்டபோது
அங்கே -
சங்கீதமும், கவிதையும்
செத்துப் போயின!

# இடம் பெயர்வு

## வவுனியா திலீபன்

வழமை போலவே அன்றும் காலை விடிந்து, கந்தபுரம் கிராமம் பரபரப்பு அடைந்தது. காலைச் சூரியனின் கதிர்கள் பட்டு பச்சை இலைகள் பளபளப்பாகக் காட்சி தந்தபோது முதல் ஷெல் அந்த ஊரின் மையப் பகுதியில் வீழ்ந்து வெடித்தது.

அதன் அதிர்வில் பறவைகள் ஓசையெழுப்பின. மாடுகள் மிரண்டு ஓட்டமெடுத்தன. கிராமத்து மக்கள் பீதியினால் செய்வதறியாது நின்றனர்.

''ஆமிக்காரன் வெளிக்கிடுகிறான் போல கிடக்கு'' செய்தி தீயாய்ப் பரவியது. குண்டு வீச்சு விமானங்கள் வானில் வட்டமிட்டன. தூரத்தில் இராணுவ முகாமை அண்டிய பகுதியில் வெடிச் சத்தங்கள் கேட்டன.

''நீங்கள் காலையிலவேலைக்குப் போனியளெண்டால் பின்னேரம்தான் வருவியள். எனக்குத்தானே தெரியும் என்ன நட்டம் எண்டு''

''அந்த நட்டத்தைத்தான் கேட்கிறன்''

''ஏதோ... எங்கட சுதந்திரத்திற்கு இன்னொரு குடும்பம் இஞ்சையிருக்கிறது இடைஞ்சலாகத்தான்இருக்கிறது.''

மனைவியின் பதிலுக்குப் பின் அவன் மௌனமானான். யோசித்தான். எப்படி அவன் குடும்பத்தை துரத்துவது?

நாட்செல்லச்செல்லஜோதியின் நச்சரிப்பு அதிகரித்தது அவன் நிம்மதிதொலைந்தது.

''எங்கட பிள்ளைகளிண்ட படிப்பும் கெட்டுப் போகுது. அந்தப் பிள்ளைகளோடு எப்பவும் ஒரே விளையாட்டுத்தான். நீங்கள் யோசிக்கிறியளில்லை...'' என்று அன்று ஜோதி வந்து அவன் காதில் சொன்னாள்.

எப்படியாயினும் இன்று ஒரு முடிவு எடுக்க வேண்டும்.

ஊர்மக்கள் கால் நடையாகவும், மாட்டு வண்டிகளிலும், சைக்கிள்களிலும் இடம் பெயர்ந்து செல்லத் தொடங்கினர்.

''இஞ்சேருங்கோ... யோசித்து முடிவு செய்யுங்கோ. இஞ்சைதான் இடைஞ்சல். போய்த் தங்குகிற இடத்திலும் இடைஞ்சல் இருக்கக் கூடாது. நீங்கள் எங்கட வீட்டிலை தங்க வைத்திருக்கிற குடும்பத்தை இப்பையெண்டாலும் வேறிடம் ஒன்றிற்கு அனுப்பி வையுங்கோ''

மனைவி ஜோதியின் பேச்சு அவனுக்குப் புரிந்தது. முடிவெடுக்க முடியாமல் மனம் திண்டாடியது.

'உதவி கேட்டு வந்தவனை உபசரித்தேன். இன்று என் உபசரிப்பின் காலம் முற்றுப் பெறப்போகிறதே'

அயல் கிராமத்திலிருந்து இடம் பெயர்ந்து அவனும் அவன் குடும்பமும் வந்து ரகுநாதனின் வீட்டுவாசலில் நின்றபோது-

முகம் சுழிக்காமல்-பெருமையோடு, 'உனக்குச் செய்ய முடியாத உதவியா?' என்ற தோரணையோடு - தன் வீட்டில் தங்குவதற்கு இடம் கொடுத்தான். அன்றிரவே-மனைவியின் முணுமுணுப்பு அவன் மனதை சீரழித்தது. மௌனமாக அழுதான்.

'நட்பின்அருமையை அவள் அறிய மாட்டாளா?'' என ஏங்கினான். தன் கவலை... மனைவியின் கோபம் தன் நண்பனின் குடும்பத்திற்கு தெரியக் கூடாது என்று மௌனமாகஅவனைக் கண்டு புன்னகைப்பான்.

ஒரு தடவை-

இரவுப் பொழுது-

''அந்தக் குடும்பம் இஞ்சை இருக்கிறதாலை எங்களுக்கு என்ன நட்டம் என நீர் கருதுகிறீர்?'' என மனைவியிடம் கேட்டான்.

கணேஷின் குடும்பம் இங்கு வந்து ஒருவருடமாகிவிட்டது. இந்த நினைவுடன் அவன் அலுவலகம் சென்றபோது-

முதல் ஷெல் கந்தபுரத்தில் விழுந்தது. ரகுநாதனின் மனம் அலை பாய்ந்தது. ஜோதியும் பிள்ளைகளும் வீட்டில்... கணேஷின் குடும்பமும் வீட்டில்...

குண்டு வீச்சு விமானங்கள் வானில் இரையும் சத்தம் காதில் நுழைந்த போது- அவன் கால்கள் வீட்டினை நோக்கித் திரும்பின.

வீட்டில் உள்ள அனைவரினதும்முகங்களும் அவன் மனக் கண்ணில் தெரிந்தன.

தொண்ணூறு முற்பகுதியில் இந்திய இராணுவம் அந்தக் கிராமத்தை விட்டுச் சென்ற பின்னர் இராணுவத்தின் பாதங்கள் எவையும் அந்த அழகிய ஊரில் பட்டது கிடையாது.

மக்கள் மகிழ்ச்சியாகவே காணப்படுவார்கள். வயல் வெளிகள் பயிர் ஆடை போர்த்தே காணப்படும். கந்தபுரம் குளத்தில்இருந்து வயல் வெளிக்குப் பாய்ச்சப்படும் நீர் சலசலத்துக் கொண்டு ஓடுவது சங்கீதமாக இருக்கும். கவிதையாக இருக்கும்

டாங்கிகளோடு - கனரக வாகனங்களோடு- ஆயிரக் கணக்கான இராணுவத்தினர் அந்தக் கிராமத்தைமுற்றுகையிட்டபோது-

சங்கீதமும், கவிதையும் செத்துப் போயின. வானத்தில் வரிசையாகச் சிறகடித்துப் பறக்கும் பறவைக் கூட்டங்கள் கூட இன்று அக்கிராமத்தை நோக்கிப் பறப்பதில்லை.

மனைவியின் யோசனைப்படி கணேஷின் குடும்பத்தை பாதுகாப்புக் கருதி வேறிடம் செல்லுமாறுஅனுப்பி வைத்துவிட்டு-

ரகு வீதிக்கு வந்தபோது- இராணுவம் நெருங்கி வந்து கொண்டிருப்பது தெரிந்தது.

பிள்ளைகளை அள்ளித் தோளில் சுமந்து கொண்டு- மனைவியை அழைத்துக் கொண்டு வீதிக்கு வந்த போது- ஊர்மக்கள் எவரையும் காணவில்லை.

அச்சத்தில் அவன் தேகம் குலுங்கியது. விறைத்துப் போய் நடந்துவரும் மனைவியைச் சமாதானப்படுத்தினான். மிக சமீபத்தில் வெடிச் சத்தங்கள் கேட்ட வண்ணம் இருந்தன

''எங்க நாங்கள் இப்ப போறம்?''

''அதுதான் தெரியேலை''

''கணேஷ் ஆட்கள் எங்க போயிருப்பினம்?''

''தெரியேலை''

பிள்ளைகள் பயத்தாலும் பசியாலும் நடுங்கின. களைப்பு மிகுதியால் ரகு மரம் ஒன்றின் கீழ் ஆசுவாசமாக அமர்ந்தான். தூரத்தில் விமானம் ஒன்று குண்டுவீசியதன் அதிர்வு கேட்டது. கண்ணுக்குத் தெரியும் தூரம் வரை மனிதர் எவரையும் காணவில்லை.

''ஜோதி''

''சொல்லுங்கோ''

''வந்திட்டாங்கள்... எங்கட பொடியள் அடிச்சுக் கலைக்கும் வரை அங்குதான் இருப்பான்கள். இந்த அநியாயப்படுவான்களாலே எத்தினை சனம் செத்துதோ தெரியவில்லை:''

''இஞ்சேருங்சப்பா எனக்குப் பயமாக இருக்கு. இப்ப நாங்கள் எங்க போறது. இனி எங்க தங்கிறது?''

''நட போவம் ''

நடந்தார்கள்.

எங்கும் அவர்கள் போகவில்லை. வீதியில் நடந்து கொண்டே இருந்தார்கள். இரவாகிவிட்டது

''தூரத்தில் வெளிச்சம் தெரியுது. அது வீடாகத்தானிருக்க வேணும். அங்கை போய் தங்க இடம் கேட்டுப் பார்ப்பம். கொஞ்சம் வேகமாய் நடப்பம்.''

அந்த வீடு நிறைய எங்கும் மனிதர்கள், குழந்தைகளின் அழுகுரல்கள், அவர்களும் இடம்பெயர்ந்து வந்தவர்கள் தான்.

ஒரு மெல்லிய விளக்கு வெளிச்சம் அந்த வீட்டின் படலையடி நோக்கி வந்தது.

''இஞ்சை நாங்கள் தங்க இடமிருக்கோ ?''

''நீங்கள் வேற இடம்தான் பார்க்க வேணும். இஞ்சை நெருக்கடி'' - ஓர் ஆணின் குரல் சொன்னது

நடந்தார்கள்.

கால்கள் அசதியால் சோர்ந்து போயின.

அடுத்த கிராமத்தில் ரகுவின் தூரத்து உறவினர் வீடு ஒன்று உள்ளது என்ற ஞாபகம் அவனுள்முகிழ்த்தபோது-

அவன் கண்கள் பிரகாசித்தன.

இச் செய்தியை ஜோதிக்குச் சொன்னபோது அவள் முகம் மலர்ந்தாள் மனம் மகிழ்ச்சியால் திளைத்தது நம்பிக்கையுடன்... எதிர்பார்ப்புடன் நடந்தார்கள்.

அந்த வீட்டிற்குச் சென்றபோது-

ரகுவோ... ஜோதியோ அடையாளம் காணப்படவில்லை. ரகு தன்தந்தையின் பெயரைச் சொன்னான். வீட்டின் முதியவர் ஒருவர் அவனை நெருங்கி கட்டித் தழுவினார்.

வழமையான உபசரிப்புகள் முடிந்த பின்னர்-

''ஆர் தம்பி உங்கட ஊரில செத்தது.''

''எப்ப... எப்படி?''

''காலையில் ஷெல் விழுந்து... கணேசாம், அவன் செத்துப் போனானாம்.''

''ரகுவின் இதயம் உடைந்தது. நெஞ்சில் இரத்தம் கசிந்தது. கண்ணிமைகளின் ஓரம் சுடுநீர் பெருக்கெடுத்தது. ஜோதி மௌனமாக அவனைப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

அவன் தலையைத் தொங்க விட்டபடி மௌனமாக யோசித்துக் கொண்டிருந்தான். அவள் அவன் முகத்தைப் பார்த்தபடி நின்றாள்.

அந்த வீட்டுக்காரர்கள் எதுவும் புரியாத நிலையில் ரகுவையும் ஜோதியையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டு இருந்தனர்.

அங்கு அமைதி நிலவியது. தூரத்தில் துப்பாக்கி வேட்டுக் சத்தம் இருளினூடே மிதந்து வந்து தேய்ந்து போனது.

''பிரச்சினையில்லை. இன்னைடக்கு உங்களுக்கு. நாளைக்கு எங்களுக்கு நீங்கள் இஞ்சை இருக்கலாம். எல்லா வசதியும் இஞ்சையிருக்கு.''

அந்த வீட்டின் பெரியவர் இப்படிச் சொன்ன போது ரகுவின் கண்களும் ஜோதியின் கண்களும் ஒரு வினாடி சந்தித்து விடைபெற்றன

ரகு தன்னை சமாதானப்படுத்த முயன்றபடி

''பிள்ளைகளுக்கு இப்ப பசிக்கும் எண்டு நினைக்கிறன்'' என்றான்.

இரவு ரகுவோ அல்லது ஜோதியோ அதிகம் பேசிக் கொள்ளவில்லை. இருவரும் உறங்கவில்லை. விடிந்த போது கந்தபுரம் கிராமத்தைப் பற்றிய புதிய புதிய செய்திகள் வந்தன. இராணுவம் அங்கு முகாமிட்டிருப்பதாகவும் பொதுமக்களின் வீடுகளும், கடைகளும் தீ வைத்து கொளுத்தப்பட்டுள்ளதாகவும் சுடு செய்திகள் பரவின.

''கணேஷின் குடும்பம் இப்ப எங்கை இருப்பினம்?'' என்று ஜோதி திடீர் என்று கேட்ட போது - அவன் அவளை ஆழமாகப் பார்த்தான்-

''இல்லையப்பா. அதுகள் இருக்க இடமில்லாமல் கஷ்டப்படுங்கள். அதுதான் கேட்கிறன்!''

அவன் அவளை மௌனமாகப் பார்த்தான்

கணவன் இல்லாமல்... குழந்தைகளை தனிமையில் வைத்துக் கொண்டு அந்தத் தாய் .! தந்தையை இழந்த நிலையில் அந்தக் குழந்தைகள்...!

''இஞ்சேருங்கப்பா... அதுகளைக் கண்டு இஞ்சை கூட்டிக் கொண்டு வாங்கப்பா... எல்லோரும் ஒண்டாயிருப்பம்.'' என்று விசும்பி விசும்பி அவள் சொன்னதைக் கேட்டு ஆச்சரியத்துடன் அவன் அவளைப் பார்த்தான்.

## பாடம் இது புதிது!

புயலாய் எழுந்த புலிப்போர்ப் படையணி
புகுந்தனர் ''பூநகரி!''
துயரே அளித்த துட்டரின் பாசறை
துடைத்தனர் ''யாவுஞ் சரி''
பயந்து சிதறிய பாதகப் பதர்கள்
பறந்தனர் மகிழ்ந்து சிரி!
உயிரினை ஈந்தநம் உத்தமர்களுக்காய்
ஓரிரு துளிகள் சொரி!

பாதையை மறித்துப் படையினை நிறுத்திப்
படுகொலை புரிந்தவர்கள்!
நீதியை மிதித்து நித்தமும் அநீதி
நிகழ்த்தியே திரிந்தவர்கள்!
ஊதிடப் பறக்கும் சருகுகளாகி
உயிர்விட்(டு) உருண்டனர் காண்!
மேதினி வியந்து மெச்சிடும் சாதனை
வென்றனர் மறப்புலிகள்!

முழங்குகடல், வான். தரையென எதிரி
முப்படை பெரிதென்றான்!
வழங்கிடும் கூலிப் பிச்சையை ஏந்த
வந்தவர் அரியென்றான்!
விளங்கிட வைத்தனர் வீரம் எதுவென
வேங்கைகள் அடி ஒன்றால்!
இழந்தனர் மானம் இனவெறிப் படைகள்
எமபுரம் குடி கொண்டார்!

புலிப்படை வீரர் போர்க்களத் திறமை
புதுப் புற நானூறு!
அலியெனக் கிடந்த அந்நியப் படைக்கு
ஆம்! இது நெருப்பாறு!
நிலையென எதிரி நிம்மதியோடெம்
நிலத்தினில் இனிக் கிடவான்!
வலையினிற் சிக்கிய வாளை மீனென
வதங்கியே அழிந்திடுவான்!

பூநகரிப் படை முகாம் அடி புலிகள்
புகட்டிய புதுப்பாடம்!
ஈனர்க்கு இன்னும் இருக்குது அதிர்ச்சி
எரிதழல் எழுந்தாடும்!
மானத்தைப் பெரிதாய் மதிப்பவர் தமக்கு
மரணமோர் விருந் தாகும்!
தானமாய் உயிரைத் தந்தவர் தாகம்
தணித்திடல் கடன், வாரும் !!!

- நிலா தமிழின்தாசன்


## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்

1901-09-08

மறைவு

1992-12-18



### திருமதி செசிலியா அலெக்சாண்டர்

அகிலத்தில் என்னை ஈன்ற
பேரன்புத் தெய்வமே - எந்தன்
உள்ளத்தில் ஏற்றி வைத்து
வணங்குகின்றேன் - அன்னையே

வாழ்வினில் கலந்தே ஞான ஒளியானாய்
தாழ்வினில் முடிந்ததோ ஆண்டு ஒன்று
முன் பாசமுடன் நேசம் வைத்தே
பக்குவமாய் என்னை வளர்த்தாய்

சீலமுடன் கல்வி ஊட்டி
சீருடன் வாழ வைத்தாய் - அன்னையே
காலம் கரை புரண்டு ஓடினாலும்
மண்ணில் நான் இருக்கும் வரை
நின்னை மறப்பேனோ

கட்டுடை, **M. T. P.** இராசநாயகம்
மானிப்பாய். (6908) தகவல்: மகன்

## ஜப்பானின் அணுகுண்டு

இரண்டாவது உலகப் போரின் போது ஹீரோஷிமா, நாகசாகி அணுகுண்டு சேதத்தை அனுபவித்து உணர்ந்த ஜப்பான், நீண்ட காலமாக அணு ஆயுதம் தயாரிப்பது பற்றி சிந்திக்காமல் ''நமக்கு இது தேவையில்லை'' என்றுவிட்டு வைத்திருந்தது.

இதற்கிடையில் தென் கொரிய மற்றும் வடகொரிய நாடுகள் அவ்வப்போது இதனிடம் வாலாட்ட ஆரம்பித்தது மட்டுமில்லாமல் அவைகள் அணுகுண்டு தயாரிப்பிலும் இறங்கி விட்டன. அவைகளுக்கு பதிலடி கொடுக்கவும் பிறநாடுகளுக்கு எச்சரிக்கை விடுக்கும் வண்ணமாகவும் தானே அணுகுண்டு தயாரிக்கத் தீர்மானித்து பிரான்ஸ் நாட்டின் உதவியை நாடியது.

பிரான்ஸ் நாடும் பெரும் தொகையைப் பெற்றுக் கொண்டு புளுடோனியத்தைத் தந்துள்ளது. இந்த விஷயம் அமெரிக்காவுக்குத் தெரியவர அது ஜப்பானை திருப்தி செய்வதற்காக தனது நீர் மூழ்கிக் கப்பல்களையும், செயற்கைக் கோள் பாதுகாப்பையும் தந்து உதவியிருக்கிறது.

## சன்மார்க்க சபை - குரும்பசிட்டி
### மணிவிழா நிகழ்ச்சித் தொடர் - 3
### இரசிகமணி கனக செந்திநாதன் நினைவு
## இலக்கியச் சந்திப்பு

இடம்: யாழ்ப்பாணம் நாவலர் மண்டபம்
காலம்: 19-12-1993 ஞாயிறு காலை 9 மணி
தலைவர்: கலாகேசரி ஆ. தம்பித்துரை
தொடக்கவுரை: பேராசிரியர் அ சண்முகதாஸ்
(தலைவர், தமிழ்த்துறை, யாழ். பல்கலைக் கழகம்)

நினைவுப்பேருரை

**இரசிகமணியும் படைப்பாளிகளும்**
கலாநிதி கந்தையா குணராசா
(செங்கையாழியான்)

கருத்தரங்கு:

**அனுபவம் பேசுகிறது**
செம்பியன்செல்வன் - க. சிதம்பரநாதன்
வீரமணி ஐயர் - கோகிலா மகேந்திரன்

**அனைவரையும்அன்புடன்அழைக்கின்றோம்**

ஏ. ரி. பொன்னுத்துரை
வைத்திய கலாநிதி எஸ். பிரபாகரன்
மணிவிழாச்சபை இணைச் செயலாளர்கள்
குரும்பசிட்டி. (6884)


## பண்டிகை கால மலிவு விற்பனை

- 10 வீதம் கழிவு விலைகளில் சுவர் மணிக்கூடுகள்
- மலிவு விலையில் பலவகைப் பொருட்கள்
- ரூபா 500/-க்கு மேற்பட்ட கொள்வனவிற்கு இலவச பரிசு சிட்டைகள்

  மாதாந்தம் 3 பரிசுகள் ரூ. 2500/- ரூ. 1500/- ரூ. 1000/-
- பண்டிகை கால அன்பளிப்புகளிற்கு அன்பளிப்பு மடல்கள் வழங்குநருக்கும் பெறுநருக்கும் மாதாந்த பரிசு சிட்டைகள்
- ஆண்கள் பெண்கள் தையல் சேவை

குறித்த தவணை   சிறந்த தையல்

குறைந்த விலை! தரமான பொருட்கள்!! நிறைந்த சேவை!!!

இலாபம்! அதிர்ஷ்டம் !!

## — எழிலகம் —

மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

குறிப்பு:
18, 19ஆம் திகதி சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் காலை 9 00 முதல் மாலை 6-00 மணி வரையும் 20-12-93 முதல் 24-12-93 வரை மாலை 7-00 மணி வரையும் கடை திறக்கப்படும். (சி-8138)



### தமிழீழத்தின் புதிய அத்தியாயம்!

அழகிய வர்ணப் படங்களை காலாகாலத்திற்கு நிலைத்து நிற்க சிறந்த முறையில் சட்டமிட்டு அமைத்துக் கொடுக்கும் முன்னணி நிறுவனம்.

## ∴ படமாடம் ∴

சகல விதமான
- பூக்கண்ணாடி
- சாதாரண கண்ணாடி
- அலுமினிய இணைப்புக்கள்
- சாமிப்படங்கள்
- இனிப்பு கண்ணாடிப்பெட்டிகள்
- மீன் தொட்டிகள்

ஆகியவற்றை மலிவு விலையில் பெற்றுக்கொள்ளவும் மற்றும் சகலவிதமான படங்களை சட்டமிட்டுப் பெற்றுக்கொள்ளவும் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

**படமாடம்**

அர்ச்சுனா வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-7890)


## 2 ம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
### ஞானமணி தர்மலிங்கம்

பிறப்பு: 01 - 09 - 1920
இறப்பு: 17 - 12 - 1991

திதி 24- 12. 1993

அன்புடன் நினைவு கூரும்,

'திருவேர் அகம்'
மாவீரர் வீதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், சகோதரர்கள்,
பேரப்பிள்ளைகள்.
(6907)

## 61 ம் நாள் நினைவஞ்சலி



மண்ணுலகில்: 01 - 02 - 1945

விண்ணுலகில்: 19 - 10 - 1993

### கந்தையா பாலசுப்பிரமணியம்

நாட்கள் அறுபத்தொன்று ஆகியும் நீங்கவில்லை
எம்துயர்
எம்தலைவா நீ, எம்மை தவிக்கவிட்டுச் சென்றதேனோ
சென்ற இடம் திரும்பும் வரைகாத்திருப்போம்
வாசலிலே
இன்று சென்ற இடம் தெரியாமல் தவிக்கின்றோம்-
எம் தலைவா
எத்தனை நாட்கள் சென்றாலும் எம் மனதில் நீங்காது
உன் நினைவு
நெஞ்சிருக்கும் வரை உன் நினைவிருக்கும்.

உரும்பராய் கிழக்கு, மனைவி, மக்கள்.
உரும்பராய். (சி-8127)

யாழ்ப்பாணம்

# கடல் வலயத் தடைச் சட்டம்;
# 8 லட்சம் மெ. தொன் மீன்வளம் இழக்கப்பட்டது

எஸ்· சூசை

கடந்த பத்து ஆண்டுகளாக வடக்கு கிழக்குப் பகுதிகளில் சிறிலங்கா அரசினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற இராணுவ ஆக்கிரமிப்பு காரணமாக மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ள துறைகளுள் மீன்பிடியும் ஒன்றாகும். வடக்கு கிழக்கு கரையோரப் பிரதேசங்கள் சில இன்று இராணுவ ஆக்கிரமிப்புக்குள்ளாகியிருப்பதுடன் மீனவர்களின் உடைமைகள், பெருமளவில் நாசமாக்கப்பட்டு அவர்களின் இயல்பான வாழ்வும் சீர்குலைக்கப்பட்டுள்ளது. பல மீனவர்களின் உயிர்களும் அநியாயமாக பறிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக வடபகுதியில் ஏற்படுத்தப்பட்டுள்ள பொருளாதாரத்தடை, போக்குவரத்துத் தடை என்பனவற்றுடன் கடல் வலய பாதுகாப்புச்சட்டமும் மீன்பிடித் தொழிலை முழுமையாக பாதிப்படையச் செய்துள்ளது. வறுமையின் கோரப்பிடிககுள் சிக்கியுள்ள மீனவர்களின் எதிர்காலம் கேள்விக்குரியதாகவே இருந்து வருகின்றது.

### கடல் பாதுகாப்பு வலயம்

கடந்த செப்டம்பர் முற்பகுதியில் வடகிழக்குப் பிரதேசத்தைச் சார்ந்துள்ள கரையிலிருந்து 12 மைல் தூரம் வரையிலான ஆள்புல எல்லை (Territorial Zone) கரையிலிருந்து 200 மைல்(322KM) தூரம் வரையிலான பொருளாதார தனியுரிமை வலயம் (Exclusive Economic Zone) என்பன தடைசெய்யப்பட்ட வலயமாக சிறிலங்கா அரசினால் பிரகடனம செய்யப்பட்டுள்ளது. இதுபோன்ற ஒரு காவல் வலயபிரகடனமானது 1985 நவம்பர் 18-ம் திகதியும் அப்போதைய ஜனாதிபதி ஜெயவர்த்தனாவால் பிரகடனம் செய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. அன்றைய பிரகடனமானது யாழ்ப்பாண கிழக்கு கரையிலுள்ள சுண்டிக்குளத்திலிருந்து தலைமன்னார் வரை கரையிலிருந்து 5மைல் தூரத்துக் கப்பால் ஆழ்புல எல்லைக்கு இடைப்பட்ட பகுதியை உள்டக்கியிருந்தது.இன்றைய பிரகடனமானது.மேலும் ஒருபடி மேலே சென்று வடகிழக்குப் பகுதி முழுவதையும் உள்ளடக்கியதாக அமைந்துள்ளது.

### வளங்கள்

வடகிழக்குப் பகுதியானது வடக்கே யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார் ஆகிய கடற்றொழில் விரிவாக்க அலுவலர் (DFEO) பிரிவுகளையும் கிழக்கே திருகோணமலை, மட்டக்களப்பு, கல்முனை ஆகிய பிரிவுகளையும் உள்ளடக்கியதாகும். இப்பிரதேசங்கள் இலங்கையில் ஏனைய பிரதேசங்களைவிட ஒப்பீட்டு ரீதியில் மீன்பிடிதுறைசார்ந்து கூடுதலான வாய்ப்புக்களைக் கொண்டுள்ளது. இலங்கையின் மொத்தக் கரையோர நீளம் 1920 கிலோ மீற்றராகும் (தீவுகள், குடாக்கள் உட்பட) இதில் வடகிழக்கு கரையோர நீளம் கிட்டத்தட்ட 1200 கிலோ மீற்றராகும். அத்துடன் ஆழம் குறைந்த அகன்ற கண்டத்திட்டுக்களையும், சிறப்பு வாய்ந்த மன்னார் முத்துக்கடலடித்தளமேடை, பேதுரு மேடை போன்ற கண்டமேடைப்பகுதிகளையும், பரந்த உவர் நீர்ப் பரப்புக்களையும், பல நன்னீர் வாவிகளையும் கொண்டதாகவும் விளங்குகின்றது. மேற்குறிப்பிட்ட வாய்ப்புக்கள் காரணமாக இலங்கையின் மொத்த உள்நாட்டு மீன் உற்பத்தியில் 53ச.வீதத்துக்கும் அதிகமான பங்கினைப் பெறுகின்றது.அந்நியச் செலாவணியை ஈட்டித் தருகின்ற கடலக ஏற்றுமதிப் பொருள்களான கடலட்டை, இறால், சங்கு, நண்டு. கணவாய் போன்றனவும் இப்பிரதேசத்திலேயே கூடுதலாக உற்பத்தி செய்யப்படுகின்றது. இன்று இப்பிரதேசத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள பல்வேறு தடைகள் காரணமாக மேற்குறிப்பிட்ட வாய்ப்புக்கள் அனைத்தும் இழக்கப்பட்டுவிட்டன.

இலங்கையின் மொத்த மீனவக்குடித் தொகையானது 1989 கணிப்பீட்டின்படி ஏறக்குறைய 412200 பேராகும். இதில் வடகிழக்கில் 273629 பேரைக் கொண்டுள்ளது. மொத்த மீனவக்குடித் தொகையில்இது 66.3 சதவீதமாகும். நேரடியாக ஈடுபடுவோரில் 64.2 வீதமும் மொத்த மீனவக்குடும்பத்தில் 66.7 வீதமும் இப்பகுதி கொண்டிருக்கிறது.

அட்டவணை - இல. 1

### வடகிழக்கு கரையோரம் - மீனவர் விபரம்

| கடற்றொழில் விரிவாக்க அலுவலர் பிரிவு | மொத்தக் குடும்பம் | நேரடி ஈடுபாடு | மொத்த மீனவர் |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 22563 | 24839 | 101177 |
| மன்னார் | 5127 | 5684 | 24252 |
| முல்லைத்தீவு | 2798 | 3183 | 13286 |
| கிளிநொச்சி | 1047 | 1163 | 4949 |
| திருக்கோணமலை | 5675 | 6502 | 28456 |
| மட்டக்களப்பு | 12044 | 12843 | 55292 |
| கல்முனை | 9328 | 9022 | 42217 |
| மொத்தம் | 58582 | 63236 | 273629 |

### மீன்வளப்பயன்பாடு


கடலக வளங்கள் நிறைந்து காணப்படுவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்ற போதிலும் அதன் பயன்பாடானது எதிர்மறையாகவே தொடர்கிறது. 1983ஆம் ஆண்டுவரையிலும் உற்பத்திப் போக்கில் சீரான வளர்ச்சி காணப்பட்டபோதிலும் உள்ளூர் மீன் உணவுத் தேவையானது இறக்குமதி மூலமே பூர்த்தி செய்யப்பட்டுவந்தது. 1983இன் பின்னர் உற்பத்தியில் மிகமோசமான வீழ்ச்சி காணப்பட்டதுடன் இறக்குமதியின் அளவையும் உயர்வடையச் செய்துவிட்டது. 1983இல் 184.1 ஆயிரம் மெற்றிக் தொன்னாக இருந்த கரையோர மீன் உற்பத்தி 1984இல் 136.6 ஆயிரம் மெற்றிக் தொன்னாக வீழ்ச்சியடைந்தது. 1989இன் பின்னர் மீண்டும் ஒரு வீழ்ச்சியை சந்தித்தது. 1989இல் 157.4 ஆயிரம் மெற்றிக் தொன்னாக இருந்த உற்பத்தி 1990இல் 134.1 ஆயிரம் மெற்றிக் தொன்னாக வீழ்ச்சியடைந்தது. இத்தகைய வீழ்ச்சிக்கு பிரதான காரணம் வடக்கு கிழக்கு கரையோரங்களில் ஏற்பட்ட இராணுவ ஆக்கிரமிப்பு, இராணுவ கெடுபிடிகள் ஆகும். வடபகுதியான மன்னார்,யாழ்ப்பாணம முல்லைத்தீவு ஆகிய பகுதிகள் 35.6 ச. வீதமான பங்கினையும் கிழக்குப்பகுதியானதிருக்கோணமலை, மட்டக்களப்பு கல்முனை ஆகிய பகுதிகள 17. 9சதவீதமான பங்கினையும் பெற்று மொத்தம் 53-60 ச. வீத பங்கினை வழங்குகின்றது. இப்பங்களிப்பு வீழ்ச்சியடைந்தமையே மொத்த மீன் உற்பத்தி வீழ்ச்சிக்கு காரணமாகும்.

உள்ளீடுகள், அபிவிருத்தி முயற்சிகள் வழமைபோல் வழங்கப்பட்டு, இயல்புநிலையானது தொடர்ந்தும் வடகிழக்குப் பகுதியில் நிலவியிருப்பின் 1991இல் ஏறக்குறைய 2 இலட். 50 ஆயிரம் மெற். தொன்னிலிருந்து 2 இலட். 75 ஆயிரம் தொன்வரையில் கரையோர மீன் உற்பத்தி பெறப்பட்டிருக்கும். 1984இல் இருந்து இற்றைவரை வருடாந்தம் 50 ஆயிரம் மெற் தொன்னிலிருந்து 1 இலட்சம் மெற். தொன் வரையிலும் வடகிழக்குப் பகுதியில் இழக்கப்பட்டுவருகின்றது. கடந்த 10 வருடங்களிலும் சுமார் 7-8 இலட்சம் மெற். தொன் மீன்வளம் இழக்கப்பட்டுள்ளது.

உற்பத்தியில் ஏற்பட்ட இழப்பை ஈடுசெய்யமீன் உணவுப் பொருட்களின் இறக்குமதியையும் அதிகரிக்கவேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது. உதாரணமாக 1982 இல் 317.87 மில் ரூபா பெறுமதியுடையதாக இருந்த மீன் இறக்குமதி1991 -ல் 2003.31 மில்.ரூபாவால் உயர்வடைந்திருப்பதுகுறிப்பிடத்தக்கது. 1313மில்.ரூபாபெறுமதியுடைய38 ஆயிரம்மெற்றிக்தொன் கருவாடு இதில் உள்ளடக்கப்பட்டது. உற்பத்தி வீழ்ச்சியானது வருடாந்தம் இறக்குமதிக்காக பெருந்தொகை பணத்தை விரயம் செய்ய வேண்டிய நிலைக்கு நாட்டைதள்ளியுள்ளது. அத்துடன் ஏற்றுமதி வருமானத்தையும் கணிசமான அளவில் பாதித்து வருகின்றது. வடகிழக்குப் பகுதிகளிலிருந்து பெருமளவு உற்பத்திசெய்யப்படும்இறால் கடலட்டை சங்கு இதில் முக்கியமானவையாகும். 1989 -ல் 1215.13 மில். ரூபாவாக இருந்த ஏற்றுமதி வருமானம் 1991 - ல் 855.54 மில்.ரூபாவால் வீழ்ச்சியடைந்தது. இங்கு குறிப்பிடத்தக்கது.கடலக ஏற்றுமதி - இறக்குமதிகளுக்கிடையிலானவர்த்தகமீதி பாதகநிலையைத்தோற்றுவித்ததுடன் தலா நுகர்விலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளமையும்அவதானிக்கத்தக்கது. 1983 இல் 15.75 கிலோகிராமாக இருந்த தலாநுகர்வானது 1986/87 களில் மேற்கொண்ட ஆய்வுகளின்படி 5.05 கிலோகிராமாக வீழ்ச்சியடைந்திருப்பதாக அறிக்கைகள் கூறுகின்றன. இவ்வாறு இழக்கப்பட்டுள்ளவளமானது வடகிழக்கு வாழ் மீனவர்களுடைய பெரும் இழப்பாகவே கருதலாம்.

### வடகிழக்கு நிலை

1983 ஐத் தொடர்ந்து வடகிழக்குப் பகுதி கரையோர மீனவர்கள் படிப்படியாக பாதிப்படையலாயினர். மீனவர்கள் பலர் அகதிகளாக இடம்பெயர்ந்து சென்ற போதிலும்மீன்பிடிக் கிராமங்கள் இராணுவத்தால் ஆக்கிரமிப்புக் குட்படுத்தப்படவில்லை. 1990 - ல் ஏற்பட்ட இரண்டாவது ஈழப் போரின் போது வடகிழக்கின் பெரும்பாலான மீன்பிடிக் கிராமங்கள் இராணுவ ஆக்கிரமிப்புக்குட்படுத்தப்பட்டன. வடபகுதியில் தீவுப்பகுதி, வலிகாமம் வடக்கு, வடமேற்கு, கட்டைக்காடு பகுதிகளும், முல்லைத்தீவின் தென்கரையோரம், மன்னார்தீவுப்பகுதி, சிலாபத்துறை, வங்காலை ஆகிய பிரதேசங்களும் இவ்வாறு ஆக்கிரமிப்பிற்குட்படுத்தப்பட்டன. மீனவர்களில்பெரும்பாலானோர் அகதிகளாக சகலஉடைமைகளையும் இழந்து வெளியேறியுள்ளனர். யாழ் மாவட்டத்திலிருந்து 9100க்கும் மேற்பட்ட மீனவக் குடும்பங்களும், முல்லைத்தீவில் 2400 குடும்பங்களும் மன்னாரில் 2000 மீனவக் குடும்பங்களும் இவ்வாறு இடம்பெயர்ந்துள்ளனர் இவ்வாறு இடம்பெயர்ந்தோர்கள் இராணுவ ஆக்கிரமிப்புக் குட்படாத பகுதிகளில் மீன்பிடித்தொழிலைச் செய்யமுடியாத நிலையிலேயே உள்ளனர். உபகரணங்கள் மற்றும் மீன்பிடி கருவிகள் பெறமுடியாத நிலையும், கடன்வசதிகள் பெற முடியாத நிலையிலும் இவர்கள் உள்ளனர். ஆக்கிரமிப்புக் குட்படாத பகுதிகளில் கூட 1 மைல் தூரத்திற்கப்பால் மீன்பிடிக்க முடியாத நிலையில் கடற்படையினரின் அட்டூழியங்கள் மலிந்துவிட்டன. உயிரைப் பணயம் வைத்தே ஏரிப்பகுதிகளிலும், வடமராட்சி வட, கிழக்குப் பகுதிகளிலும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மீன்பிடிக்க வேண்டிய நிலையில் உள்ளனர். இது வரையில் பல மீனவர்கள் கொடூரமாக கடலில் வைத்து கொலை செய்யப்பட்டுள்ளதுடன் கடற்படையினரால் அடித்துத் துன்புறுத்தப்பட்டு உடைமைகள்சேதமாக்கப்படுகின்ற நிலைமையும் - கரையோரக் கிராமங்கள் எறிகணை வீச்சிற்கு இலக்காகி வருவதும் தொடர்கின்றன. இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் மன்னார்தீவுப் பகுதி மீனவர்கள் இராணுவ மீன் உணவு தேவை கருதியே மீன்பிடிக்க மட்டுப்படுத்தப்பட்ட அளவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். கிழக்கு கரையோரப் பிரதேசங்களிலும் இதே நிலைதான் தொடர்கிறது.




### கடல்வலய பாதுகாப்பும், இந்தியமீனவர்களின் ஆக்கிரமிப்பும்

வடக்கு கிழக்கு கரையோரப் பிரதேசம் முழுவதும் இன்று பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. வடபகுதி கடற்பிராந்தியத்தில் அமைந்துள்ள கச்சதீவு பகுதியில் இந்தியமீனவர்களுக்கு மீன் பிடிக்க அனுமதி வழங்கப் பட்டுள்ளது. எமது வளம் இன்று இந்திய மீனவர்களால் தொடர்ந்தும் சுரண்டப்பட்டு வருகின்றது. 1974-ல் சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தத்தின் மூலம் கச்சதீவு இலங்கைக்குச் சொந்தமாகியது. சச்சதீவுப் பகுதியில் இந்திய மீனவர்களுக்கு மீன் பிடிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ள போதிலும் மீன் பிடிக்கும் பகுதியின் சரியான எல்லைகள் வரையறை செய்யப் படவில்லை. தமிழ் நாட்டுமீனவர்கள் வடபகுதியின் ஆள்புல எல்லைப் பகுதியினுள் பேசாலை, தலைமன்னார், நெடுந்தீவு வரையும் வந்து இழுவை வலை மீன் பிடியை மேற்கொள்ளுகின்றனர்- பல சந்தர்ப்பங்களில் கடற்படையினரால் இந்தியமீனவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டமையும்- இதனை எதிர்த்து தமிழ் நாட்டில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றுவருவதும் குறிப்பிடத்தக்கது. கச்சதீவை மீளப்பெற வேண்டும் என தமிழ்நாடு அரசு இன்று போர்க் கொடி தூக்குவதும் கடல்வளப் பயன்பாடு கருதியேயாகும்.

எமதுவளம் எம்மால் பயன்படுத்தப்படாது கடல்வலய பாதுகாப்புச் சட்டங்கள் போட்டு தடைசெய்யப்பட்டமையும்'எமது வளம் அந்நியரால் சுரண்டப்பட அனுமதி வழங்கப்பட்டுள்ளமையும் சிறிலங்கா அரசின் காட்டுமிராண்டித்தனத்திற்கு சிறந்த எடுத்துக் காட்டாகும்.

அனைத்துலகப்பெண்கள் நாளை முன்னிட்டு
விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பினால் நடாத்தப்படும்

## இலக்கிய, ஓவியப் போட்டிகள்

1994-03-08 இல் நிகழவிருக்கும் அனைத்துலகப் பெண்கள் நாளை முன்னிட்டு, தமிழீழப் பெண்களுக்கான இலக்கிய, ஓவியப்போட்டிகளை நடாத்த விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு முடிவு செய்துள்ளது.

இலக்கியப் போட்டிகள் சிறுகதை, கவிதை என்ற இரண்டு விடயத்தின் கீழ் நடைபெறும்.

ஓவியங்களை எந்தவகை ஓவியங்களாகவும் போட்டியாளர்கள் விரும்பியபடி வரையலாம்

போட்டிக்கான விதிமுறைகள் :-

- படைப்புக்கள் தமிழீழப் பெண்களின் பிரச்சினைகளுக்கான தீர்வை முன்னெடுப்பதாகவும், அவர்களின் முன்னேற்றத்தைச் சுட்டுவதாகவும் அமைய வேண்டும்.
- கவிதைகள் 35 வரிக்கு மேற்படாதனவாகவும், சிறுகதைகள் 4 பக்கங்களுக்கு மேற்படாதனவாகவும் இருக்க வேண்டும். ஓவியங்கள் போட்டியாளர்கள விரும்பும் அளவில் வரையப்படலாம்,
- போட்டியாளரின் சொந்தப்பெயர், முகவரி, வயது என்பன தனியாக ஒரு தாளில் எழுதப்பட்டு, படைப்புக்களுடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும்.
- கடித உறையின் இடது பக்க மேல் மூலையில், ''அனைத்துலகப் பெண்கள் நாள் இலக்கியம், ஓவிய போட்டிக்கான படைப்புக்கள்'' என்றுகுறிப்பிடப்பட வேண்டும்.
- நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது
- போட்டி முடிவுத் திகதி — 1994-01-20
- படைப்புக்களை அனுப்பவேண்டிய முகவரி:

**சுதந்திரப்பறவைகள்,**
**வெளியீட்டுப் பிரிவு,**
**விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பு,**
**கோண்டாவில்.**

தமிழீழப் பெண்களின் படைப்பாற்றலை ஊக்குவிக்குமுகமாக நடாத்தப்படும் இவ் இலக்கிய, ஓவியப் போட்டிகளில் கலந்து கொள்ளுமாறு அனைத்துப் பெண்களையும் விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு கேட்டுக் கொள்கின்றது

**விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு**

(சி-8080)


## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

A/L 93 இல் பரீட்சை எடுத்த மாணவர்கட்கான

**கலை, வர்த்தக மீட்டல் வகுப்புக்கள்**

சனி, ஞாயிறு வகுப்புக்கள்

**ஆரம்பம் : 19-12-93 8 a. m.**

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு:-

பொருளியல்: திரு. க கலாகரன்
வர்த்தகம் : திரு தேவா
கணக்கியல் : திரு S.K பிரபாகரன்
அளவையியல்: திரு. விக்கி
தமிழ் : திரு. குழந்தை
இந்துநாகரிகம், இந்துசமயம் -: திரு. காரை சுந்தரம்பிள்ளை
புவியியல் : திரு. குணராசா
அரசியல் : திரு. ஜெயகாந்தன்
வரலாறு : திரு. ஸ்ரீதரன்

DAY CLASS வகுப்புக்கள் ஆரம்பமாகி விட்டன.
அனுமதிகளை உடன் பெறவும்.

(சி-8123)


## 31ம்- நாள் நினைவஞ்சலி



தோற்றம்:
27 - 09 - 1925

மறைவு:
17 - 11 - 1993

**திருமதி திலகவதிப்பிள்ளை சதாசிவம்**
அவர்கள்
(இளைப்பாறிய ஆசிரியை
மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்)

பாசமுடன் எம்மைப் பாங்குடனே வளர்த்து
பண்புடன் தழைத்தோங்க காத்தீரே அம்மா!
ஏற்றமொடு நாமினிது வாழ இப்புவியில் வித்திட்டு
நேற்றுவரை எங்கள் உயிரோடு குடியிருந்து
மின்னலென மறைந்தாயே அம்மா நாமிங்கு கதறியழ
மாதம் ஒன்று ஓடி மறைந்தாலும் ஆறிடுமோ உம் நினைவு அம்மா!
எம்உள்ளம் எந்நாளும் உங்களையே எண்ணித் தவிக்குதம்மா
இரும்பாக்கி எம்மனதை இறுக்க நினைத்தாலும்
கரும்பானஉம் நினைவுகளே, கண்முன் நிழலாடுதம்மா
விழிநீரை எந்நாளும் உம்நினைவுக்காய் நாம் உதிர்க்கின்றோம் அம்மா!
தங்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பெரிய அரசடி,
சாவகச்சேரி.
குடும்பத்தினர்
(6893)

## தேன் ஏன் பழுதடைவதில்லை?

தேனீ மலர்களிலிருந்து சேகரிக்கும் தேனை அப்படியே வைத்துக் கொள்வதில்லை. வீட்டுக்குச் செல்லும் போது அதற்கென்றே விசேடமாக வயிற்றுக்குள் ஒரு பை வைத்திருக்கிறது அதில்தான் கொண்டு போகிறது. வயிற்றிலிருந்து இந்தப் பையைப் பிரிக்க சிறிய வால்வு இருக்கிறது. சமூகத்துக்கு வேண்டியதைச் சொந்தமாகச் சாப்பிட்டு விடாமல் பாதுகாக்க! இந்தப் பையில் இருக்கையில் பூந்தேன் சில இரசாயன மாறுதல்களுக்கு உள்ளாகிறது. அதிலிருக்கும் சர்க்கரை வகைகள் மாறுகின்றன. தேன் இந்த மாறுதலுக்குப் பின் தேன் கூட்டில் சேகரித்து வைக்கப்படுகிறது. கூட்டின் சூடும் காற்றோட்டமும் சேர்த்துக்கொண்டு தேன் இறுகுகிறது. அதில் இருக்கும ஈரம், தண்ணீர் பெரும்பாலும் நீக்கப்பட்டுவிடுகிறது. இந்த விதத்தில் பழுத்து, நீர் நீக்கப்படுவதாலும் இரசாயன வகையில் தேனீயின் வயிற்றில் மாற்றம ஏற்படுவதாலும் தேன் ரொம்ப நாள் பழுதடையாமல் இருக்கிறது.

ஆஸ்திரேலியாவில் வசிக்கும் தேனகூடு எறும்புகள் தமது வேலைக்கார எறும்புகளை வற்புறுத்தி பூக்களில் உள்ள தேனை குடிக்கச் செய்கின்றன. வயிறுமுட்டக் குடித்துவிட்ட போதிலும் விடுவதில்லை. முடிவில் எறும்பின் வயிறு பலூன் போல் ஊதி வெடித்து விடும் என்ற நிலை வருகிறது ஒரு நடமாடும் தேன் கூடாகவே மாறிவிட்ட இந்த வேலைக்கார எறும்பை அசங்காமல் ஒரு இலை மேல் கிடத்தி, இலையை இழுத்துச் சென்று புற்றிற்குள் சேர்க்கின்றன. புற்றிற்குள் தேன்கூடு எறும்பு தன் முன்னங்கால்களால் ஒரு பொருளைப் பற்றிக் கொண்டு தொங்கும். தொடர்ந்து வரும் பஞ்ச நாட்கள் முழுவதும் புற்றிலுள்ள மொத்த எறும்புகளும் இதன் வயிற்றை துளைத்து தேனை எடுத்து உண்டு உயிர் வாழ்கின்றன.

## இன்றுமுத்திரையிடல்

யாழ். செயலக நிறுவைகள் அளவைகள் திணைக்களத்தினர் மானிப்பாய் பட்டின சபை அலுவலகத்தில் வைத்து நிறுவைகள், அளவைகள் உபகரணங்களுக்கு முத்திரையிட்டுக் கொடுக்கும் வேலைகளை ஆரம்பித்து செய்து வருகின்றனர்.

இப்பகுதிக்கு உட்பட்ட சகல கடை வர்த்தகர்களையும் வியாபாரிகளையும் இன்று காலை 9.00மணி தொடக்கம் பி. ப. 2.00மணி வரை தத்தமது நிறுவை அளவைகள், தூக்குத்தராசு, அளவுகருவிகள ஆகியனவற்றுக்கு முத்திரையிடுச் செல்லுமாறு இத்திணைக்களப் பொறுப்பதிகாரி திரு. எஸ். நாகலிங்கம் தெரிவித்துள்ளார். (24)


## வட இலங்கை தொழில் நுட்பக் கல்லூரி
### புதிய கம்பியூட்டர் பயிற்சி வகுப்புக்கள்

**INTRODUCTION TO COMPUTER & BASIC LANGUAGE**

இத்துடன்

1) Word Processing
2) Spread Sheet
3) Graphics
4) Communication
5) Data Base க்கான மேலதிக செய்முறைப் பயிற்சி வகுப்புக்களும் நடைபெறும்.

**காலை, மாலை, வார நாள் வகுப்புகள்**

விபரங்களுக்கு:

NORTH CEYLON
TECHNICAL INSTITUTE,
14, St. Peter's Lane,
JAFFNA

(சி-8941)



## COMPUTER கல்வி

**Basic Language**
சனி, ஞாயிறு வகுப்புகள
ஆரம்பம்: 18-12-93 2.00 மணி

**LOTUS 1-2-3**
செவ்வாய், வியாழன் வகுப்புகள்
ஆரம்பம். 21-12 93 8.30 மணி

**CIMA, IAB, Short - Hand & Typing** வகுப்புகளும் ஆரம்பமாகின்றன

உறுதியான கல்வியைப் பெற

School Of Business Administration
16, 3rd Cross Street,
JAFFNA.
(சி-8136)



## நம்பிக்கை! நாணயம்!! உத்தரவாதம்!!!

- சிற்றிஷன், கஸியோ கைக்கடிகாரங்கள்
- வீடியோ ஓடியோ கசெற் மற்றும் பிலிம் றோல்கள்
- கசற் றேடியோ, வீடியோ டெக், கலர் தொலைக்காட்சிப் பெட்டிகள்
- ஒறிஜினல் மக்ஸல் மணிக்கூட்டு பற்றறிகள்
- புரட்சிப்பாடல்கள், தத்துவப்பாடல்களை தரமானமுறையில் பதிவுசெய்பவர்கள்

மற்றும்

உங்கள் எலக்றோனிக் பொருள்களைக் கொள்வனவுசெய்பவர்கள்
கைக்கடிகாரங்கள் மற்றும் றேடியோ, கசற்செற், டெக், ரீ. விக்களை
உத்தரவாதத்துடன் திருத்திக்கொடுப்பவர்கள்

தொடர்புகளுக்கு.

## மின்வளம்

இல 81, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-8122)

# டி. பி. விஜேதுங்கவின் புறக்கணிப்பிற்கு பதிலடி கொடுக்க முனையும் தொண்டமான்

ஜெயராஜ்

''சிறிலங்காவின் அரசியல் வானில் நிரந்தர இரட்டை வேட நட்சத்திரமாகத் திகழ்பவர் தொண்டமான் ஒருவர் தான். அமைச்சராக, அதே சமயம் தொழிற்சங்க தலைவராக - பேரினவாத அரசின் பிரதிநிதியாக - அதேசமயம் தமிழரின் பாதுகாவலனாக சமகால முரண்பட்ட பாத்திரங்களில் தோற்றமளித்தார். இது அவரது அரசியல் வித்தகமா? அல்லது அரசியல் நய வஞ்சகமா? இதுபற்றி அவரிடமே கேட்டால் அதில் என்ன தவறு என்பார்'' அமைச்சர் தொண்டமானின் அரசியல் பாத்திரம் பற்றி இவ்வருட ஆரம்பத்தில் பாலகுமாரன் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்.

பாலகுமாரனின் இக்கூற்றை வலியுறுத்துமாப் போலவே சிறிலங்கா அரசியலில் இன்று அமைச்சர் தொண்டமான் வகிக்க முற்படும் பாத்திரம் உள்ளது. மத்தியில் ஐ தே.க. அரசாங்கத்தில் அங்கம் வகித்துக் கொண்டே மத்திய மாகாண சபையில் காமினி திஸ நாயக்காவை முதலமைச்சர் ஆக்கும் முயற்சியில் தொண்டமான் இறங்கியுள்ளார்.

இது குறித்து - காமினியை முதலமைச்சராக்குவது தொண்டமான் தெளிவான நிலைப்பாடு கொண்டுள்ளதாகவே தென்னிலங்கையில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. எதிர்வரும் 21ஆம் திகதி மத்திய மாகாண சபையில், முதலமைச்சர் மீது கொண்டுவரப்படும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்துவாக்களிக்கும்படி தொண்டமான் தமது கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களுக்குத் தெளிவாகவே வலியுறுத்தியுள்ளார். சிலவேளைகளில், நம்பிக்கையில்லாப் பிரேரணை ஏதாவது காரணங்களினால் தாமதப்படுமானால் மத்திய மாகாண சபையில் உள்ள 11 இ. தொ. கா. உறுப்பினர்களும் முதலமைச்சரைப் பதவி விலக்கக் கோரும் கடிதத்தை சமர்ப்பிக்கும்படியும் கோரியுள்ளார்.

அமைச்சர் தொண்டமானின் இம்முடிவானது தென்னிலங்கை அரசியலில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளதோடு, தொண்டமானின் நிலைப்பாடு குறித்துக் கேள்விகளையும் எழுப்பியுள்ளது. மத்தியில் அமைச்சராக இருக்கும் தொண்டமான் பிரதான எதிர்க்கட்சித் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளமையானது 27 வருடகாலமாக இருந்துவரும் ஐ தே. கட்சியுடனான உறவை முறித்துக் கொள்ளத் தீர்மானித்து விட்டாரா என்ற கேள்வியைப் பலர் மத்தியில் கேட்க வைத்துள்ளது.

ஆனால், திட்டவட்டமாக அமைச்சர் தொண்டமானின் இம்முடிவானது, ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கவிற்கு தமது பலத்தை வெளிக்காட்டும் ஒரு நடவடிக்கையே ஆகும். அல்லாது போனால், ஒரு காலத்தில் - காமினி அமைச்சராக இருந்த போது - தன்னை நாய்மீதுஇருக்கும்ஒட்டுண்ணி என கூறியகாமினி திஸநாயக்காவை ஆதரிக்கத் தொண்டமான் ஒரு போதும் இம்முடிவு எடுத்திருக்கப் போவதில்லை. இதைவிடுத்து அமைச்சர் தொண்டமான் குறிப்பிட்டது போன்று ''எமது சமுதாயத்தின் அபிலாசைகளை யார் புரிந்து கொண்டு அவற்றை நிறைவு செய்ய முன்வருகின்றார்களோ அவர்களுடன் நான் பேசுவேன்.'' என்பது அவரின் கடந்தகால அரசியல் நிலைப்பாட்டிற்கு பொருத்தப்பாடானதொன்றாகக் கருதமுடியாது.

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கவுடன் ஆரம்பம் முதலே அமைச்சர் தொண்டமானுக்கு முன்னாள் சிறிலங்கா ஜனாதிபதிகள் ஜே. ஆர். ஜெயவர்த்தனா ஆர்· பிரேமதாசா ஆகியோருடன்இருந்த நல்லுறவுநிலவவில்லைஎன்றே கூறலாம். இதற்கு டி.பி·விஜேதுங்க முன்னைய ஜனாதிபதிகள் தொண்டமானுக்கு வழங்கிய முக்கியத்துவத்தை வழங்கவில்லை என்பது மட்டுமல்ல மலையகத்தில் தொண்டமானுக்கு எதிரான சக்தியாக ஐ. தே. க விற்குள் ஒரு அணியை உருவாக்க முற்பட்டமையும் காரணமாகும்.

ஐ. தே. கட்சியில் இருந்து காமினி திசாநாயக்கா வெளியேறிய பின்னர் மலையகத்தைப் பொறுத்து ஐ. தே. கட்சிக்கு ஒரு பலம் பொருந்திய தலைமை இருக்கவில்லை என்பதே உண்மை. ஆனால் பிரேமதாசாவின் மறைவானது டி. பி. விஜேதுங்கவிற்கு தங்கத்தட்டில் வைத்து ஜனாதிபதிப் பதவியை ஐ. தே. கட்சி தாரைவார்த்த போது டி பி. விஜேதுங்க ஐ தே. கட்சியின் தலைமைத்துவத்தை மட்டுமல்ல, ஐ. தே. கட்சியின் மலையகத் தலைமையையும் பொறுப்பேற்றுக் கொண்டார்

இந்நிலையில் டி. பி விஜேதுங்கமலையகத்தில் தொண்டமானில் ஐதேக தங்கியிருப்பதைத் தவிர்த்துக்கொள்ளவே விரும்பினார் கண்டிச் சிங்களவர் என்ற தனதுபிறப்புரிமையைக் கொண்டு ஆதரவுதேடிக் கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டார்.

இந்த முயற்சியின் ஒரு அங்கமாகவே சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் இருந்து அநுரா பண்டாரநாயக்காவைப் பிரித்தெடுத்து ஐ.தே காவில் சேர்த்துக்கொண்டார். அநுரா பண்டாரநாயக்ககண்டிச் சிங்களவரின் வாரிசு என்பதினால் மட்டுமல்ல 1977 தேர்தலில் மஸ்கலியாத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றியீட்டியவர் என்பதினாலும் ஆகும். இதன் மூலம் ஒரு பலமான அணியை உருவாக்க முற்பட்டார். ஆனால் அநுரா பண்டாரநாயக்காவைசேர்த்துக்கொள்வதை தொண்டமான் விரும்பவில்லை. தனது அதிருப்தியைத் தொண்டமான் ஓரளவு வெளிக்காட்டியும் இருந்தார். ஆனால், டி. பி. அதற்கு எதிர்மாறாகவே நடந்து கொண்டார். அநுராவைச்சேர்த்துக் கொண்டதோடு மட்டுமல்ல அமைச்சர் பதவி வழங்க முன்வந்தார். இது தொண்டமானுக்கு டி பி விஜேயதுங்க கொடுத்தபலமான அடி என்றே கொள்ள வேண்டும்.

மேலும்டி.பி விஜேயதுங்கா தன்னை ஒரு பௌத்த சிங்களத்தலைவராகவே இனங்காட்ட முற்பட்டார் இந்த ரீதியில் தீவிரவாத பௌத்த சிங்களபேரினவாதங்களுக்குத் தலைமைகொடுக்கவும்முற்பட்டார். இதன்மூலம் மலையகத் தமிழரின்பாதுகாப்புகுறித்தும் உயிர்வாழ்வு குறித்தும் நிச்சயமற்ற தன்மை ஒன்றையும் உருவாகும்நிலையும்தோன்றியது

இதேவேளை அரசாங்கம் மலையகத் தோட்டங்களை முப்பது வருடங்களுக்கு தனியார் கொம்பனிக்கு விடுவதென எடுத்த முடிவானது அமைச்சர் தொண்டமானின் அரசியற்தளத்தையேஆட்டம் காணவைக்கும் நடவடிக்கையாக அமைந்தது.

இந்த உடன்பாட்டின் பிரகாரம், தோட்டங்கள் முப்பது வருட காலத்திற்குத் தனியார் கொம்பனிகளிடம் விடப்படுவது மட்டுமல்ல, தோட்டங்களில் அரசியல் அமைப்புக்கள் கலைக்கப்படவேண்டும் என்பதோடு, அரசியற் தலையீடுகள் எதுவும் இருக்கக்கூடாது. தோட்டத் தொழிலாளர்களின் லீவுகள் கணிசமான அளவில் குறைக்கப்படவேண்டும் என்பனவும் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

இந்நிலையில்தான் தனது அரசியல் அடித்தளத்தையே ஆட்டம் காணவைக்கும் இம் முயற்சிக்கு எதிராக அமைச்சர் தொண்டமான், தனது அரசியல் நிலைப்பாட்டை மாற்றியமைக்கும் முயற்சியில் இறங்கினார்.

இதைத்தொடர்ந்து எதிர்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவுடனும், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணித் தலைவர் காமினி திசா நாயக்காவுடனும், அமைச்சர் தொண்டமான் பேச்சுக்களை நடத்தினார். இதில் மத்திய மாகாண சபைக்கான முதலமைச்சர் பதவியைக் காமினி திசாநாயக்காவிற்குவழங்குவதில்தீர்க்கமான முடிவுஒன்று பெறப்பட்டது.

இம்முடிவின் மூலம் இ. தொ. காவைப் பொறுத்து, டி.பி. விஜேதுங்க மலையகத்தில் உருவாக்க நினைத்துள்ள தலைமைத்துவத்திற்கு சவால் விடும் அளவிற்கு பலமான ஒரு அரசியல் தளத்தை வெளிக்காட்ட இது உதவக் கூடும் என்பதோடு, மலையகத்தின் ஆட்சியாளருக்கு இ. தொ. காவின் ஆதரவு அவசியம் என்பதை புரிய வைப்பதற்கும் அவசியமானதாகவும் அமையலாம்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியைப் பொறுத்து ஐ.தே. கட்சியிடம் இருந்து ஒரு மாகாணசபையைப் பறிப்பதாக இருக்கும். ஐ ஐ தே. முன்னணிக்கோ ஒரு முதலமைச்சர் பதவி என்பதோடு, அரசியலில் தடுமாறிக் கொண்டிருக்கும் நிலையைப் போக்கி அரசியலில் நிலையாகக் கால்ஊன்ற வாய்ப்பாக இருக்கும்.

ஆனால் மத்திய மாகாண சபையில் எதிரணியினருக்கு ஆதரவு அளிப்பதென இ. தொ. கா. தலைவர் தொண்டமான் தெரிவித்திருந்த போதிலும் ஐ. தே. கட்சியுடன் தொடர்பை நீடிப்பதற்கான முயற்சிகளையும் கைவிடவில்லை. குறைந்தது 300 நாட்கள் வேலை, தொழிலாளர்களுக்கு குடியிருப்புக் காணிகள் பகிர்ந்தளிப்பு, சம்பள உயர்வு என்பனவற்றை அடிப்படையாக வைத்துப் பேச்சுக்களை நடத்தினார். அரசதரப்பில் பிரதமர் ரணில், அமைச்சர் சிறிசேனாகுரே போன்ற முக்கியஸ்தர்கள் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டும் முன்னேற்றம் எதுவும் காணப்பட்டதாக இல்லை.

இந்நிலையானது, அமைச்சர் தொண்டமானை திருப்திப்படுத்தும் நிலைப்பாட்டை அரசாங்கம் கடைப்பிடிக்கவில்லை என்பதை தெளிவாக வெளிக்காட்டியுள்ளது. இப் பேச்சுவார்த்தைதோல்வி குறித்து கருத்து வெளியிட்ட அமைச்சர் தொண்டமான் 20 வருடங்களாக ஐக்கிய தேசியக் கட்சியுடன் தொழிலாளர் தொடர்பாக இதுவரை நடத்திவந்த பேச்சுவார்த்தைகள் முறிவடைந்து விட்டன இனிமேல் அரசியல் விடயங்கள் மட்டுமே பேசப்படும் என்றார்.

அமைச்சர் தொண்டமானின் இக் கூற்றானது இனி அரசியல் பேரத்தைத் தவிர ஐ தே. க. வுடன்பேச்சுக்கள் நடத்துவதற்கு எதுவுமில்லை என்பதன் அறிவிப்பாகவே கொள்ள வேண்டும்.

இந் நிலையில், இன்னமும் நான்கு தினங்களில் மத்திய மாகாண சபையில் கொண்டு வரப்படவுள்ள முதலமைச்சர் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் இ.தொ. கா. ஐ தே. கட்சிக்கு எதிராக வாக்களிக்குமானால் மத்திய மாகாணசபையில் ஐ. தே. கவின் ஆட்சி பறிபோய் அதிலிருந்து பிரிந்து சென்ற ஜ. ஐ தே. முன்னணி தலைமையிலான கூட்டு ஆட்சி ஏற்படலாம். இது மத்தியிலும் பிரதிபலிக்கலாம், இ. தொ. கா. — ஐ. தே. க. உறவுமுறிவடைவதில் இது சென்று முடியலாம்.

ஆனால், அமைச்சர் தொண்டமான் கூறிக் கொள்வது போன்று ''மலையகத்தின் அபிலாசைகளை'' எந்தளவிற்கு எதிரணியினர் நிறைவேற்றி வைப்பார்கள் என்பது கேள்விக்குரியதே. ஏனெனில், கடந்த காலத்தில், இவர்களின் செயற்பாடுகளும் மலையக மக்களை அங்கிருந்து ஒழித்தலே நோக்கமாக இருந்தது. சிறிலங்கா சுதந்திரக்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின் மூலம் மலையகத் தமிழரை வெளியேற்ற முற்பட்டவர். காமினி திசநாயக்காவோ நுவரேலியாவில் இனக்கலவரத்தினை முன்னின்று நடத்தியவர்.

இந் நிலையில் ஐ. தே- கட்சியுடன் 20 வருடம் இடம் பெற்ற பேரம் பேசுதலில் நிறைவேற்ற முடியாததை எதிரணியினரால் எந்தளவிற்கு நிறைவேற்ற முடியும்? பேரம்பேசும்அரசியலால் ஆட்சியை மாற்றலாம், அமைச்சர் தொண்டமான் தனது அரசியற்பலத்தை காட்ட முனையலாம், ஆனால்அவை மலையக மக்களின் பிரச்சினைக்குதீர்வாகுமா? என்றால் இல்லை என்றே கூறலாம்.

---

## இன்னொரு ருஷ்டி

'ஃபத்வா' என்கிற முரட்டு மரணதண்டனை ஆணை - முதன் முதலில் அண்மைக் காலத்தில் ஈரான் அதிபர் கொமேனியால் பிரிட்டிஷ் எழுத்தாளர் (பம்பாய் பூர்வீகம்) சல்மான் ருஷ்டிக்கு எதிராக வழங்கப்பட்டது இப்போது மறுபடியும் அதே 'ஃபத்வா' பங்களாதேஷ் எழுத்தாளர் 'தஸ்லீமா நஸ்ரீன்' உயிருக்கு குறி வைக்கிறது.

இஸ்லாமிய அடிப்படை வாதத்திற்கு எதிராக பெண்ணியக்கக் கருத்துக்களை துணிச்சலாக எழுதி வருகிறவர் தஸ்லீமா நஸ்ரீன் சமீபத்தில் இவர் எழுதிய நாவலின் பெயர் 'லஜ்ஜா' வெட்கம்என்றுபொருள் அயோத்தியில் மசூதி இடிக்கப்பட்ட பங்களாதேஷில் உள்ள இந்துக்கள் பெரும் பாதிப்புக்கு ஆளானார்கள் கலவரத்தில் பெண்கள் அடைந்த துன்பத்தை அப்பட்டமாக இந்த நாவல் விவரிக்கிறதாம்.

அவ்வளவுதான் 5000மக்கள் கூடியிருந்த சாலையில் மௌலவிகள் முழங்கினார்கள் - தஸ்லீமா தூக்கிலிடப்பட வேண்டும் தூக்கிலிடும் நபரிற்கு 50,000 டாக்கா வெகுமதி தரப்படும்!'' இந்த ஃபத்வா செயல் வடிவம் பெறாவிட்டால் தேசிய வேலை நிறுத்தம் நடக்கும் என்று வேறு மிரட்டினார்கள்

தஸ்லீமா ஒரு டாக்டர். முன்பே ஒரு முறை இவரது நூல்கள் எரிக்கப்பட்டு இவரும் தாக்கப்பட்டிருக்கிறார் இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்தபோது இவரது பாஸ்போட் பங்களாதேஷில் பறிமுதல் செய்யப்பட்டிருக்கிறது காரணம் டாக்டரான தஸ்லீமா பத்திரிகையாளர் என்ற முறையில் இந்திய விசா வாங்கினார் என்பது! தஸ்லீமா டாக்டர் பதவியை ராஜினாமா செய்த பின்பும் தொல்லைகள் தரப்படுகின்றன.

மூன்று முறை திருமணம் புரிந்தும் இவரது இல்வாழ்க்கை திருப்திகரமாக இல்லை. முதல் கணவர் ஒரு டாக்டர் அந்த மன முறிவுக்குப் பிறகு பத்திரிகைத் துறையைச் சேர்ந்தவர்களையே அடுத்தடுத்து கணவராக ஏற்றார் பொதுவாக திருமணம் என்பது பெண்களுக்குப் பாதுகாப்பானதாக இல்லை என்கிற அனுபவம் தனது வாழ்க்கையிலிருந்துதான் கிடைத்ததாக கூறுகிறார். - நன்றி:-புதிய பார்வை

---

## நினைவு மலர் வெளியீடு

(வடமராட்சி)

தம்பசிட்டி மெ மி. த. க. பாடசாலையில் இன்று பிற்பகல் 3. 30 மணிக்கு அமரர் முருகேசு பகீரதன் அவர்களின் நினைவாக நினைவு மலர் வெளியீட்டு விழா ஒன்று நடைபெறவுள்ளது.

வடமராட்சி பரியோவான் முதலுதவிப்படை, பருத்தித்துறை காங்கேயன் சாரணர் குழுவினரால் இந் நினைவு மலர் வெளியிடப்படுகின்றது.

(யோ)

## உதைபந்தாட்டம்

குருநகர் புனித யாகப்பர் ஆலய புனர் நிர்மாண நிதிக்காக 'பாடுமீன்' விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைப் பந்தாட்ட போட்டியில் இன்று மாலை 3 மணிக்கு றோயல் எதிர் அன்ரனிஸ் உம் மாலை 4 மணிக்கு விநாயகர் எதிர் நிக்கிலஸ் உம் விளையாடுகின்றன.

இப் போட்டிகள் யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

## 'வெட்டுமுகம்' வெளியீட்டு விழா

இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் எழுதிய ''வெட்டுமுகம்'' சிறுகதைத் தொகுதி வெளியீட்டுவிழா யாழ். பல்கலைக் கழக மறுமலர்ச்சிக் கழகத்தின் ஆதரவில் எதிர்வரும் 20.12 1993 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 3.00மணிக்கு யாழ் பல்கலைக் கழக கைலாசபதி அரங்கில் நடைபெற உள்ளது

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தின துரை அவர்கள் தலைமையில் நடைபெற உள்ள இவ் விழாவில் வெளியீட்டு உரையை கவிஞர் இ முருகையன் அவர்களும, விமர்சன உரைகளை க. தணிகாசலம், செம்பியன் செல்வன், கலாநிதி சோ. கிருஸ்ணராசா ஆகியோரும் ஆற்ற உள்ளனர்.

## நூல் வெளியீடு

(வடமராட்சி)

வட அல்வை முருகேசனார் பவள விழாவும், நூல் வெளியீட்டு விழாவும் கொண்ட வைபவம் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 00 மணிக்கு சிறிலங்கா வித்தியாலயத்தில் திரு. சி. கணேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவின் போது யாழ் பல்கலைக் கழக நுண்கலைப் பிரிவு தலைவர் பேராசிரியர் திரு. கா. சிவத்தம்பி நூல் வெளியீட்டுரை நிகழ்த்துவார். முருகேசனார் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுவார். மற்றும் பல நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன. (யோ)

## 70கோடி

வளங்களில் 20சதவீதத்தை பங்களிப்பு செய்யும் என தான் நம்புவதாக ஐ. நா. சிறுவர் நிதியத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜேம்ஸ் கிராம் கூறியுள்ளார்.

உலகில் ஆகக்கூடுதலான சனத்தொகை கொண்ட 9 நாடுகளின் கல்வி சம்பந்தமான உச்சிமாநாடு புதுடில்லியில் நடைபெறுகிறது. இந்த மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் செல்வந்த நாடுகளும்வறிய நாடுகளும் 20: 20 எனச் சுட்டிக் காட்டினார்.

இந்தியா, சீனா, மெக்சிக்கோ, பாகிஸ்தான், பங்களாதேஷ், இந்தோனேசியா, பிறேசில், நைஜீரியா எகிப்து ஆகிய நாடுகளில் 70கோடி குழந்தைகள் கல்விபெறாதவர்களாக இருக்கிறர்கள். இவர்களில் 50கோடி பேர் பெண்கள் எனவும் கிராம் தெரிவித்தார்.

# தென்மாகாணசபை உறுப்பினர் திடீர் மறைவினால் நெருக்கடி

தென்மாகாணசபை உறுப்பினர் ஒருவர் காணாமற்போனது தொடர்பாக புதிய நெருக்கடிகள் தோன்றியிருப்பதாகத்தெரிவிக்கப்படுகிறது. மிக முக்கிய வாக்கெடுப்பு அடுத்த கிழமை நடைபெறவிருக்கும் சந்தர்ப்பத்திலேயே இவர் காணாமற்போய் விட்டார்.

கடந்தவாரம் தென் மாகாண சபை உறுப்பினர் விமல் பிரான்சிஸ்கோ திடீரெனக் காணாமற்போய்விட்டார் என செய்திகள் வெளிவந்தன. முக்கியவாக்கெடுப்பு ஒன்றின் முன்னதாக அவர் கடத்தப்பட்டார்என்றுஎதிர்க் கட்சிகள் தரப்பில் சொல்லப் படுகிறது.

திடீரென அவர் விடுதி ஒன்றில் காணப்பட்டார், தான் கடத்திச் செல்லப்படவில்லை என்றும் இருதயநோய் காரணமாக மருத்துவ மனைக்குச் சென்றதாகவும் அவர் செய்தியாளரிடம் தெரிவித்தார். அவரைப் பார்க்க அவர் மனைவி அழைத்துச்செல்லப் பட்டார். ஆனால் ஐ தே. க. அரசியல்வாதிகள் முன்னிலையிலேயே அவர்கள் சந்திப்பு நடந்தது.

இந்தச் சம்பவத்தில் உண்மையான பின்னணி பற்றியும் பேசப்படுகிறது. அடுத்த கிழமை தென்மாகாண சபையில் நம்பிக்கையில்லாப் பிரேரணை வாக்கெடுப்பு நடைபெறவுள்ளது. அதே வேளை இப்பொழுது ஒரு வாக்கு வித்தியாசத்தில் சிறிலங்கா சுதந்திரக் கடசியின் ஆட்சி நடைபெறுகிறது.

விமல் பிரான்சிஸ்கோ சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆதரவாளர். ஆகவே தொடர்ந்தும் சிறிலங்காசுதந்திரக்கட்சி ஆட்சி நடத்த இவருடைய வாக்குத்தேவை. அவர் கட்சி மாறி ஐ.தே. கட்சிக்கு ஆதரவாக வாக்களித்தால் மேற்படி மாகாணசபையின் ஆட்சி ஐ. தே. கட்சியின் கைக்கு மாறிவிடும். இந்த நிலையில் அவர் கட்சிமாறினாரா அல்லது கடத்திச்செல்லப்பட்டாரா என்பது மூடுமந்திரமாகவே இருக்கிறது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## பரீட்சை விடைத்தாள்கள் 'வாதுவ'வில் செல்லும்

(யாழ்ப்பாணம்)

நடைபெற்று முடிவடைந்த க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையின் விடைத் தாள்கள் 'வாதுவ' கப்பலிலேயே கொழும்பிற்கு எடுத்துச் செல்லப்படவுள்ளதாக யாழ். கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. இதற்குமுன்னர் 'மார்க்கோ' என்கின்ற கப்பலில் இவை எடுத்துச் செல்ல முயற்சி மேற்கொள்ளப்பட்டு பின்னர் பரீட்சை ஆணையாளரிடம் இருந்து கிடைத்த விசேட உத்தரவின்படி 'வாதுவ' கப்பலிலேயே இவை கொழும்பிற்கு எடுத்துச் செல்லப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இக்கப்பல் இவற்றை ஏற்றிக் கொண்டு அடுத்தகிழமை கொழும்பு நோக்கி புறப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (பா)

## ஊழியர் இடமாற்றம்; பட்டியல் தயாராகிறது

யாழ். கல்வித் திணைக்களத்திலும் கோட்டக் கல்வி அலுவலகங்களிலும் கடமையாற்றும் கல்விச சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கும், இணைந்த சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள், ஊழியர்களுக்குமான புதிய இடமாற்றப்பட்டியல்கள் யாழ் தெற்கு, வடக்குவலயக் கல்விப்பணிப்பாளர்கள் செல்வி ரி. பெரியதம்பி, திரு. கந்தசாமி ஆகியோர்களின் மேற்பார்வையின் கீழ் தயாரிக்கப்பட்டு வருவதாக யாழ் கல்வித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

யாழ். கல்வித் திணைக்களத்தில் கணக்குப் பகுதி, கட்டடப் பகுதி, ஓய்வூதியக் கிளைஆகியவைதொடர்ந்தும் இயங்க உள்ளதனால் இக்கிளைகளில் இருந்து முன்னர் கல்விக் கோட்டங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டவர்களின் இடத்துக்குப் புதியவர்கள் இடமாற்றப்பட உள்ளார்கள் எனவும், புதிதாக செயற்பட உள்ள இரு கல்வி வலயங்களுக்கும் உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய்யப்பட வேண்டியுள்ளதாலும் இப்புதிய இடமாற்றப்பட்டியல் அவசியமாக உள்ளதாகவும் யாழ் கல்வித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேசமயம் கல்விக்கோட்டங்களுக்கு முன்னர் இடமாற்றம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களின் தொகை குறைக்கப்பட்டு வலயங்களுக்கு அவர்களை இடமாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்தாகவும் மேலும் தெரிவிக்கப் படுகிறது. (17)

## மாதம்

டுறவு சங்கங்கள் பதிவுசெய்த ஒழுங்கின்படி வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை டிசம்பர் மாதத்திற்குரிய மண்ணெண்ணெய்கான பணம் செலுத்தப்பட்டுவிட்டதாகவும் இனி வரும் மாதங்களில் மண்ணெண்ணெய் தடங்கலின்றி வருமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

**16 - 12 - 93**

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 11712

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கம்

28-7560.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்

27-8751, 40-9188.

## கண்ணிவெடி விற்பனை; தடைவிதிக்கவேண்டும்

### அமெரிக்கா யோசனை

கண்ணிவெடிகளின் விற்பனைக்கு உலகம் முழுவதும் தடைவிதிக்கப்படல்வேண்டும் எனஅமெரிக்காகேட்டுள்ளது.

நிலக்கண்ணி உற்பத்தி செய்யும் நாடுகள் எவ்வித நிபந்தனையுமின்றி ஏற்றுமதி செய்தல், விற்பனை செய்தல் அல்லது பரிவர்த்தனை செய்தல் ஆகியவற்றிற்கு மூன்று வருடங்களிலிருந்து 5வருடங்களுக்கு ஒருதலைப் பட்ச தடைகளை ஏற்படுத்த வேண்டுமென்று அமெரிக்கா யோசனை தெரிவித்துள்ளது.

நாற்பதிற்கு மேற்பட்ட நாடுகள் 340ற்கும் அதிகமான பல்வேறுபட்ட கண்ணிவெடிகளை ஏற்றுமதி செய்து வருகின்றது அமெரிக்காவும் பிரான்சும் கண்ணி வெடிகளை உற்பத்தி செய்யும் நாடுகளில் முக்கியமானவையாகும் அமெரிக்கா தயாரித்துள்ள இத்தீர்மானத்தை ஐ, நா. சபை வாக்கெடுப்பு இன்றி நிறைவேற்றியுள்ளது.

## அதிபர்கள் கூட்டம்

(பண்டத்தரிப்பு)

தெல்லிப்பழை கல்விக் கோட்ட பாடசாலைகளின் அதிபர்கள் கூட்டம் வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 10. 00 மணிக்கு மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையில் நடைபெறுமென்றும் சகல பாடசாலை அதிபர்களையும் இக் கூட்டத்திற்குத் தவறாது வருகை தருமாறு கோட்ட பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு த. துரைசிங்கம் கேட்டுள்ளார்.

இக் கூட்டத்தில் யாழ் வடக்கு வலயக் கல்விப்பணிப்பாளர் திரு க. கந்தசாமி கலந்து கொண்டு கல்வி அபிவிருத்தி தொடர்பான ஆலோசனைகளை வழங்குவாரென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கண்காட்சியும் பூர்த்தி விழாவும்

குடத்தனை அம்பன் தேசிய சர்வவோதய சிரமதான சமித்தியினால் தையல் பயிற்சி பூர்த்தி விழாவும், கண்காட்சியும் நடாத்தப்படவுள்ளது.

நாளை சனிக்கிழமை காலை 10. 00 மணியளவில் அம்பன் அ. மி. த. க பாடசாலை மண்டபத்தில் சமித்தித் தலைவர் கா. மகாலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பிரதம விருந்தினராக தேசிய சர்வோதய மாவட்ட இணைப்பாளர் திரு. பா. செல்வரத்தினம் கலந்து கொள்வார். (41)

## ஆங்கிலதின பரிசளிப்பு

பண்டத்தரிப்பு கல்விக் கோட்டப் பாடசாலைகளின் ஆங்கில தினப்போட்டிப் பரிசளிப்பு வைபவம் வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணிக்கு கோட்ட பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு த. துரைசிங்கம் தலைமையில் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இப் பரிசளிப்பு விழாவிற்கு முதன்மை விருந்தினராக கலந்துகொள்ளும் யாழ். வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திரு க. கந்தசாமி பரிசில்களை வழங்குவார்.

## அனுராவிற்கு பதவி ஐ.தே.க வின் சதி

### பி.பி.ஸி செய்தியாளர் தெரிவிப்பு

அனுராபண்டாரநாயக்காவுக்கு உயர் கல்வி அமைச்சர் பதவி வழங்கப்படுவதின் பின்னணியில் ஒரு பெரிய அரசியல் சதி உள்ளது. இவ்வாறு அமல் ஜெயசிங்கா பி.பி ஸிக்கு வழங்கிய பேட்டியின் போது கூறியுள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியை ஆரம்பித்த பரம்பரையான பொறுப்பு பண்டாரநாயக்கா குடும்பத்தைச் சேர்ந்தது அனுராவின் தகப்பன் தான் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஸ்தாபகர். அந்த வகையில் பார்க்கும்போது அனுராவை ஐ. தே. கவில் இணைத்துக்கொண்டது பாரிய சதியாகும்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியை ஆரம்பிப்பதற்கு முன்னர் தனது தகப்பன் ஐ தே. கவைச் சேர்ந்தவர் என்பது அனுரா பண்டாரநாயக்காவின் கருத்தாகும். இது சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குப் பின்னடைவைத்தரும்.

அனுராவுக்கு வழங்கப்படவுள்ள உயர் கல்வி அமைச்சர் பதவி ஒரு உத்தேச பதவியாகும். பாராளுமன்றத்திலுள்ள மற்றைய உறுப்பினர்களின் ஆதரவையும் அனுரா உறுதிப்படுத்த வேண்டும். இப்போது வழங்கப்படும் பதவிக்கு மேலான ஒரு பதவியை அவர் பெறுவதானால் தனது அரசியல் செல்வாக்கை நிலைநாட்டியாகவேண்டும். இதை அவரால் செய்ய முடியாது. ஐ. தே கவில் அனுராவின் எதிர்காலம் நன்றாக அமையாது என்றார் அமல் ஜெயசிங்கா.

## புதிய உலர்உணவு அட்டை வலி கிழக்கில் விநியோகம்

வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த நிரந்தர குடும்பங்களுக்கும் வெளிமாவட்டங்களைச் சேர்ந்த இப்பிரிவில் குடியமர்ந்திருக்கும் குடும்பங்களுக்கும் புதிதாக உலர்உணவு விநியோகத்திற்கான அனுமதி அட்டைகள் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக வழங்கப்படுகிறது.

இனிமேல் மேற்கொள்ளப் படவுள்ள விநியோகங்கள் புதிய அட்டையிலேயே செய்யப்படுமாகையால் தமது பிரிவு கிராம அலுவலர்களிடமிருந்து உடனடியாக புதிய அட்டைகளைப் பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## 57,700 நோயாளர்

தாக்குதல்கள், சிறிலங்கா கடற்படையினரின் தாக்குதல்கள் ஆகியவற்றினாலும், செப்ரிசீமியா, வாந்திபேதி, மலேரியா போன்ற நோயினாலும், போஷாக்கின்மை, வேறுபல காரணங்களாகவும் இவர்கள் இறந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## உடன்பெறவும்

(யாழ்ப்பாணம்)

கமநல சேவை நிலையங்களில் விதை உருளைக்கிழங்கு பெறுவதற்கு முற்பணம் செலுத்தி இதுவரை பெறாதவர்கள் இன்று மாலை 4 00 மணிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993ஆம்ஆண்டு டிசம்பர் மாதம் 17 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.